REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2024 செப்டெம்பர் 26 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 ANNIVERSARY තිනකරන්

வரு. 92 இல. 230 | Thursday 26, September, 2024 | 16 பக்கங்கள் | 50/-




## IMF உடன் துரிதமாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்

# மக்கள் மீதான வாழ்க்கைச் செலவு கட்டம் கட்டமாக குறைக்கப்படும்



நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று ஆற்றிய விசேட உரையில் தெரிவிப்பு

- கடன் மறுசீரமைப்பு பணிகளை வெகுவிரைவில் நிறைவுசெய்ய எதிர்பார்ப்பு
- இன வேறுபாடுகளை களைந்து இன ரீதியில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல்
- மக்களுக்கு பாதகமான அழுத்தங்கள் ஏற்படாது எதிர்பார்த்த மாற்றங்கள் விரைவில்
- சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்கி ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்கல்
- பெண்களின் பிரதிநிதித்துவத்தை மதித்து பெண் பிரதமர் நியமனம்
- எங்களது வேலைத்திட்டங்களுக்கு உயிர்மூச்சாக இருந்தோருக்கு நன்றி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்துடன் துரிதமாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நீடிக்கப்பட்ட கடன் வசதியுடன் தொடர்புள்ள விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க, எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள அதிக வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி,

நாட்டின் கடவுச்சீட்டை உலகமே மதிக்கும் நிலைக்கு நம் நாட்டை கட்டியெழுப்புவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

சந்தர்ப்பவாதம் அதிகாரமோகம் சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் போய் உள்ளது. எமது வரலாற்றில் நழுவ விட முடியாத சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகை தன்மையை ஏற்றுக் கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டி எழுப்புவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

முழுமையான உரை 5ஆம் பக்கம்

## சிறப்பான ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பு

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

நாட்டில் சிறப்பான ஒரு ஊடக கலாசாரத்தை உருவாக்குவதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகுமென, வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நேற்று தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு தேவையான சகல செயற்பாடுகளையும் புதிய அரசாங்கம் முன்னெடுக்க கடமைப்பட்டுள்ளதாகவும் 06



சவூதி அரேபியாவின் 94 ஆவது தேசிய தின விழா, இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில், கொழும்பு "ஷாங்க்ரிலா" ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தூதுவர் அல் கஹ்தானி மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் கேக் வெட்டி விழாவை கொண்டாடுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்: அஷ்ரப் ஏ சமத்)

## உத்தியோகபூர்வ வாகனங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைப்பு

### காலிமுகத்திடலில் வாகனங்கள் குவிப்பு




ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அரச வாகனங்கள் பல, புதிய நிர்வாகத்திடம் திரும்ப வழங்கப்பட்டுள்ளன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரசாங்க அமைச்சு அதிகாரிகள் பயன்படுத்திய வாகனங்களே திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அமைச்சு வளாகத்திலும், கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலக வளாகத்திலும் பல 06

## நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு; இலுக்பிட்டியவுக்கு விளக்கமறியல்

### உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எச். இலுக்பிட்டியவை விளக்கமறியலில் வைக்குமாறு, உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. கடந்த அரசாங்க காலத்தில் இலத்திரனியல் விசா விநியோக நடவடிக்கைகளை, இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கிய தீர்மானத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவை நடைமுறைப்படுத்த தவறியதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் 06

## பாராளுமன்றம் கலைப்பு; நவம்பர் 14 பொதுத் தேர்தல்

### வேட்புமனு தாக்கல் அக். 04 முதல் 11 வரை



### வேட்பாளர் எண்ணிக்கை விரைவில் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இம்முறை பொதுத் தேர்தல் விகிதாசார முறைமையில் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று முன்தினம் நள்ளிரவு பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தல் நடத்தப்படும் முறை தொடர்பில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அங்கீகரிக்கப்பட்ட 84 அரசியல் கட்சிகளும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட முடியும். சுயேட்சைக் குழுக்கள் சார்பிலும் வேட்பாளர்கள் இந்த தேர்தலில் போட்டியிட முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். 06

### ஜனாதிபதி அநுரவுக்கு

## IMF முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா வாழ்த்து தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், கிறிஸ்டலினா ஜோர்ஜுவா வாழ்த்து தெரிவித்துள்ளார். 06

## லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்



லேக்ஹவுஸ் (ANCL) நிறுவனத்தின் புதிய தலைவராக காமினி வருஷமான நேற்று (25) தமது கடமைகளை பொறுப்பேற்றார். களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டதாரியான இவர், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் ஊடகவியலாளராக தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். பல்வேறு நிறுவனங்களில் ஆய்வாளராகவும் பணியாற்றியுள்ளார். 06

## இலங்கையின் நிலைபேறான எதிர்காலத்துக்கு அமெரிக்கா ஆதரவு



புதிய அரசாங்கத்தின் கீழ், இலங்கை மக்களுக்கு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, ஆதரவளிக்கவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள, அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவின் தலைவர் பென் கார்டின் இதனைத் தெரிவித்துள்ளார். 2022 இல், உருவாக்கப்பட்ட பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதுடன், ஆளுகை, ஊழல் எதிர்ப்பு, மனித 06

## G.C.E O/L பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தகவல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை, இம்மாத இறுதிக்குள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று தகவல் வெளியிட்டுள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, 06

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு சவூதி மன்னர், இளவரசர் வாழ்த்து




புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சவூதி மன்னரும், பட்டத்து இளவரசரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சவூதி அரேபியாவின் இரண்டு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் 06

# புதிய ஆளுநர்கள் நியமனம்








ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் 09 மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நியமிக்கப்பட்ட ஆளுநர்களின் விவரம் வருமாறு,

01. ஹனீஸ் யூசுப் - மேல் மாகாண ஆளுநர்
02. சரத் பண்டார சமரசிங்க அபயகோன் - மத்திய மாகாண ஆளுநர்
03. பந்துல ஹரிஸ்சந்திர - தென் மாகாண ஆளுநர்
04. திஸ்ஸ குமாரசிறி வர்ணசூரிய - வடமேல் மாகாண ஆளுநர்
05. வசந்த குமார விமலசிறி - வட மத்திய மாகாண ஆளுநர்
06. நாகலிங்கம் வேதநாயகன் - வட மாகாண ஆளுநர்
07. ஜயந்த லால் ரத்னசேக்கர - கிழக்கு மாகாண ஆளுநர்
08. சம்பா ஜானகி ராஜரத்ன - சபரகமுவ மாகாண ஆளுநர்
09. கபில ஜயசேக்கர - ஊவா மாகாண ஆளுநர்

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்கவும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

# ஊடகத்துறை அமைச்சர் விஜித ஹேரத் கடமைகள் பொறுப்பேற்பு








வெகுஜன ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் பிரசாரச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று ஊடகத்துறை அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். சர்வமத தலைவர்களின் ஆசியுடன் அமைச்சு அலுவலகத்தில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டபோது பிடிக்கப்பட்ட படங்கள். அமைச்சர் விஜிதஹேரத் வெகுஜன ஊடகத்துறைக்கு மேலதிகமாக வெளிவிவகாரம், பொதுமக்கள் பாதுகாப்பு, புத்தசாசனம், மத, கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர்வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# பல்வேறு துறைகளிலும் நிபுணர்களை உருவாக்கிய யாழ். பல்கலைக்கழகம்

(நேற்றைய தொடர்)

தென்னிலங்கையில் இருந்து வந்த எம்மில் சிலர் ஆரம்பத்தில் எமது சக யாழ். மாணவர்களினால் மட்டுமன்றி வீதியிலுள்ள மனிதர்களாலும் சந்தேகத்துடனும் அவநம்பிக்கையுடனும் அச்சத்துடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டோம். நாங்கள் 'வெளி இடத்தவராக' இருந்தும் யாழ். சூழலை ஏற்றுக் கொண்டு நம்பிக்கை மற்றும் மரியாதை போன்ற உயர் நற்பண்புகளுடன் யாழ். சூழலில் உள்ள ஒருவராக எம்மை உணர்ந்து கொள்ள எமக்கு அதிககாலம் எடுக்கவில்லை. குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முறைக்கு நாங்கள் மதிப்பளித்தமையால் எங்கள் மீதான நம்பிக்கையும் மதிப்பும் வெளிப்படையாக யாழ். மக்களால் அங்கீகரிக்கப்பட்டன.

யாழ். குடாநாட்டில் இருப்பவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றிப் பேசும்போது, கடின உழைப்பாளிகளின் மனோநிலையைப் பாராட்டாமல் இருப்பது கடினம். அவர்கள் அதிகாலை 4.30 மணியளவில் எழுந்து தமது விவசாய பூமிக்கு தண்ணீர் பாய்ச்சி உழைத்துக் கொண்டிருப்பவர்கள். வகுப்பறை பயிற்சி தெளிவுபடுத்தல்களைப் பெறுவதற்கு நான் எனது ஆசிரியர், விரிவுரையாளர் அல்லது பேராசிரியரைக் கூட காலை 6.00 மணிக்குச் சந்தித்து தெளிவு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. சிங்கள மற்றும் முஸ்லிம் சகோதரர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் வழங்கிய அங்கீகாரம் மற்றும் இடவசதி என்பன அவர்கள் மீது எனது மரியாதை நாளுக்குநாள் அதிகரிக்கக் காரணமாகியது.

எங்கள் 'பல்கலை' வாழ்க்கை தொடர்ந்ததால், விஞ்ஞான மாணவர் சங்கத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடுமாறு எனது சக தோழர்களால் நான் கோரப்பட்டு ஒருமனதாக நான் தெரிவு செய்யப்பட்டேன். இவ்வாறாக பின்னர் மாணவர் பேரவையின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றியும் பெற்றேன். இது இன நல்லிணக்கம் மற்றும் மாணவர் ஒற்றுமையை பறைசாற்றி இருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் முதலாவது தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டேன்.

அவர்கள் உரிமைகளை எதிர்பார்த்து நிற்கவில்லை, மாறாக விளையாட்டு மைதானத்தில் சக போட்டியாளர்களாக ஏற்றுக் கொள்வதைத்தான் எதிர்பார்த்தார்கள். நாங்கள் மக்களோடு மக்களாக நான்கு ஆண்டுகள் அங்கு வாழ்ந்து, அவர்களின் விழுமியங்கள் மரபுகளைக் கற்றுக் கொண்டோம். எமக்கு நல்ல அறிவுரை ஆலோசனைகளை வழங்கிய அங்கிருந்த எம் கல்விமகான்கள் போற்றுதற்குரியவர்கள்.



இக்கட்டுரையின் எழுத்தாளர் கிங்ஸ்லி பெர்னார்ட், யாழ். பல்கலைக் கழகத்தின் முதல் தொகுதி மாணவர் என்பதுடன், இலங்கையில் பல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக சம்மேளனங்கள், சேவை வழங்கும் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் என்பவற்றில் அதிஉயர் பதவி வகித்ததுடன், லயன்ஸ் இன்டர்நேசனல் 306 டீ 2 இலங்கை, 2009-2010 வரையான காலப்பகுதியில் அதன் மாவட்ட ஆளுநராக கடமையாற்றியவர். அவர் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தற்போதைய தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார்.

பொதுவாக யாழ். மண்ணில் கற்ற சமூகத்திற்கு மதிப்பும் முன்னுரிமையும் மிக அதிகமாக இருந்ததால், நான் மருத்துவ கவனிப்புக்காக அரசு மருத்துவமனைக்குச் சென்றபோது, 'மாணவர்களுக்கு' முதலில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று மருத்துவ அலுவலர் பரிந்துரைக்கத்தக்க வகையில் கல்விக்கான முன்னுரிமை வலுவாக வலியுறுத்தப்பட்டிருந்த காலம் அது.

1980களின் முற்பகுதியில் தொடங்கிய உள்நாட்டுப் போரின் (1980_2009) தாக்கம் யாழ். பல்கலைக் கழகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. மோதல் வலயத்தில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம், கல்வி நடவடிக்கைகளுக்கு பாரிய இடையூறுகள், உள்கட்டமைப்புக்கு சேதம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் இடப்பெயர்வு உட்பட பல சவால்களை எதிர்கொண்டது.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், பல்கலைக்கழகம் வடக்கு மாகாணத்தில் ஒரு முக்கிய கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக இருந்தது. இக்கட்டான சூழ்நிலையில் இருந்த போதிலும், அது தொடர்ந்து இயங்கி வந்ததுடன், யுத்த காலங்களில் தமிழ்ச் சமூகத்தின் கலாசார மற்றும் அறிவுசார் வாழ்வைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றியது.

என் அனுபவத்திற்கு வருகிறேன். இறுதிப் பகுப்பாய்வில், யாழ்.ப்பாண மக்கள், கல்விமான்கள் முதல் சாதாரண தொழில் புரிபவர்கள் வரை அனைவரையும் பாகுபாடு இன்றி ஒன்றாக மதிக்கும் உயர்ந்த குணங்கள் கைவரப் பெற்றவர்கள் எம்மையும் தங்கள் குடிமக்களாகவே கருதி எம்மை நேசித்து பிளவுகள் அற்ற நல்லிணக்கத்தை வளர்த்தவர்களாவர். இன்று பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கிய இந்த மதிப்புமிக்க பல்கலைக்கழகம் முதன்மையான இடத்தில் போற்றப்பட வேண்டியது.

புகழ்பெற்ற பெஞ்சமின் டிஸ்ரேலி அவர்கள் மார்ச் 11, 1873 இல், ஹவுஸ் ஒஃப் காமன்ஸில் நடைபெற்ற நிகழ்வில் கூறிய வாக்கியத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

'பல்கலைக்கழகமானது ஒளி, கற்றல் கற்பித்தல் சுதந்திரம் மற்றும் புதிய எண்ணங்களின் தோற்றவாய்க்குரிய இடமாக இருக்க வேண்டும்' என்று அவர் கூறியதற்கு சான்றாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 'சாமானியர்களாக' உருவாக்கம் அடைந்தமைக்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பே காரணம்.




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த நிபுணர்களை உருவாக்கியுள்ளதுடன், இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கிலும் சேவை செய்யக் கூடிய புகழ்பெற்ற அரசியல்வாதிகளையும் உருவாக்கியுள்ளது.

உணர்வுபூர்வமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பான கருத்துக்களை எழுதும் இவ்வேளையில் இப்பல்கலைக்கழகத்திலேயே எனது சகபாடியான என் தோழியையே எனது வாழ்க்கைத் துணைவியாக நான் தேடிப்பெற்றுக் கொண்டமையை குறிப்பிட மறந்துவிடக் கூடாது.

06ஆம் பக்கம் பார்க்க...

# பொலிஸ் நிலையங்களில் இனி அரசியல் தலையீடுகள் இருக்காது

## பொலிஸார் தவறுகளை நிவர்த்தி செய்து கொள்ள இதுவே வாய்ப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பொலிஸ் நிலையங்களில் தமக்கான நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அமைச்சர்கள் தலையிடும் கலாசாரத்திற்கு, முற்றுப்புள்ளி வைக்கப் போவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று தமக்கான பொறுப்புக்களை கையேற்கும் நிகழ்வில், அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இதுவரை இடம் பெற்றுள்ள இவ்வாறான தவறான முறைமையை சரி செய்து கொள்வதற்கு பொலிஸாருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அரசியல் அழுத்தங்களுடன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கைகள், இத்துடன் நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், பொலிஸார் தொடர்பிலான மக்கள் நம்பிக்கை பெரும் வீழ்ச்சி யடைந்துள்ளது.அந்த வகையில் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

ஏதாவது தவறுகள் பொலிஸார் தரப்பில் இடம்பெற்றிருக்குமானால் அதனை நிவர்த்தி செய்து கொண்டு தமக்கான பணிகளை முறையாக முன்னெடுக்குமாறு அனைத்து பொலிஸாரையும் அவர் கேட்டுள்ளார்.

அந்த வகையில் அதிகாரிகள் மட்டத்தில் முறையாக பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும். எந்த ஒரு அரசியல் தலையீடும் பொலிஸ் நிலையத்தில் எதிர்காலத்தில் இடம் பெறாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு இவ்வாரம் முழுவதும் தடை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

ஆர்ப்பாட்டங்களுக்கு இந்த வாரம் முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறும் குழுவாக கூடுவதை தவிர்க்குமாறும் மக்களிடம் பொலிஸார் வேண்டியுள்ளனர். புதிய ஜனாதிபதி பதவியேற்றுள்ளதால், அரசியலிலும், பதவிகளிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில், அமைதியாக செயற்படுமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் நாயகமாக Dr. நஜித் இந்திக்க நியமனம்

ஜனாதிபதி ஊடக பணிப்பாளர் நாயகமாக வைத்திய கலாநிதி நஜித் இந்திக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை ரன்ன மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான கலாநிதி நஜித் இந்திக்க, கொழும்பு மருத்துவ பீடத்தில் மருத்துவ பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்.

கடந்த ஐந்து வருடங்களில் பல அரச வைத்தியசாலைகளில் வைத்தியராகவும் வைத்திய அதிகாரியாகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளராகவும் மற்றும் அரசியல் செயற்பாட்டாளராகவும் வைத்திய கலாநிதி நஜித் இந்திக்க செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய வங்கி ஆளுநருடன் ஜனாதிபதி பேச்சு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக,மத்திய வங்கி ஆளுநருடன் ஜனாதிபதி அனுரகுமாரதிஸாநாயக்க பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அதற்கு பாதிப்பாக அமைந்துள்ள விடயங்கள் தொடர்பில் இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில், மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டதாக தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பாக அமைந்துள்ள விடயங்கள் தொடர்பில் இங்கு விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஊடகத்துறை அமைச்சராக விஜித ஹேரத் கடமை பொறுப்பேற்பு



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் வெகுஜன ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜித ஹேரத், நேற்று ஊடகத்துறை அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டபோது பிடிக்கப்பட்ட படம். அமைச்சர் விஜித ஹேரத், ஊடகத்துறை அமைச்சுக்கு மேலதிகமாக வெளிவிவகாரம், பொதுமக்கள் பாதுகாப்பு, புத்தசாசனம், மத, கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர்வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் கேரளாவிலும் 'Mpox தொற்று அடையாளம்

உலகளவில் தீவிரமாகப் பரவி வரும் 'Mpox Clade 1b' குரங்கு அம்மை தொற்று, தற்போது இந்தியாவிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 38 வயதான நபரொருவருக்கே Mpox Clade 1b தொற்று, முதன் முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நபர் அண்மையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து நாடு திரும்பியவரென இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

06

## இந்திய உதவித் திட்டத்தின் கீழ்


# யாழ்.பல்கலை மாணவர்களுக்கு 30 இலட்சம் ரூபா நன்கொடை

வடக்கு கிழக்கு பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்கவுள்ளது.

இந்த நிதியுதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (25) நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களிலிருந்தும் சுமார் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

06



# வெளிவிவகார அமைச்சருக்கு ஜெய்சங்கர் வாழ்த்து



வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜித ஹேரத்துக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர், எஸ் ஜெய்சங்கர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை நாகரிக உறவுகளை வலுப்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கிடையே பாரம்பரிய நெருக்கமான நட்புறவை வலுப்படுத்துவதற்கும் ஜெய்சங்கர் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.



சவூதி அரேபியாவின் 94 ஆவது தேசிய தின விழா, இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில், கொழும்பு "ஷாங்க்ரிலா" ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கேக் வெட்டி விழாவை கொண்டாடுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ரூபவாஹினி, ITN, SLBC க்கு புதிய தலைவர்கள் நியமனம்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக கலாநிதி செனேஷ் திஸாநாயக்க பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சி நிலையத்தின் தலைவராக சுயாதீன தொலைக்காட்சியில் பணியாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர், பிரியந்த வெதமுல்ல நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக உதித கயஷான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் நேற்று (25) முற்பகல் வெகுஜன ஊடக அமைச்சில் ,ஊடகத்துறை அமைச்சர் விஜித ஹேரத்திடம் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

# அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாமல் பொதுத் தேர்தல் நடைபெறும்

## பெஃப்ரல் அமைப்பு நம்பிக்கை

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதையடுத்து பொதுத் தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் போன்றே, பொதுத் தேர்தலும் மிக அமைதியான முறையில் நடைபெறுமென நம்புவதாக பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், தேர்தலுக்கு பின்னரும் எந்தவொரு அசம்பாவித சம்பவங்களும் பதிவாகவில்லை என்றும் பெஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. மாறுபட்ட அரசியல் சிந்தனையைக் கொண்ட புதிய ஜனாதிபதியின் கீழ் நடைபெறும் பொதுத் தேர்தல் என்பதால், அரசாங்க சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யாமல் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென பெஃப்ரல் அமைப்பு நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

வருமான வரி

தனிநபர்கள், கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள்
மற்றும் ஏனைய அனைத்து ஆட்களும்
2023/2024 வரிமதிப்பீட்டாண்டுக்கான
வருமான வரிக்கான இறுதிக் கொடுப்பனவினை
2024 செப்தெம்பர் 30
அன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

கொடுப்பனவு காலப்பகுதி குறியீடு 23240

வரி வகை குறியீடு
- கூட்டிணைவு வருமான வரி (CIT) - 02
- பங்குடமை வருமான வரி (PIT) - 09
- தனியாள் வருமான வரி (IIT) - 05




கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம்

- செலுத்த வேண்டிய வரிகளை இணையவழி வரிக்கொடுப்பனவு தளத்தினூடாக (OTPP) செலுத்தலாம்.
- CIT, IIT மற்றும் PIT க்கான கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்.
- வரியை செலுத்தாது விடுதல் அல்லது தாமதமாக செலுத்துதல் மீதான வட்டி மற்றும் தண்டம் என்பன தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதை அறிந்து கொள்ளவும்.
- இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிந்துகொள்ள, கிரமமாக உள்நாட்டு இறைவரி திணைக்கள வலைத்தளத்தை பார்க்கவும்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 22

**குறள் தரும் சிந்தனை**



அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்

பொறாமை எனும் தீமை ஒருவனுடைய செல்வத்தையும் சிதைத்துத் தீய வழியிலும் அவனை விட்டுவிடும்.

# மக்களிடம் புதியதொரு ஆணை பெறுவதற்கான சந்தர்ப்பம்

சுதந்திர இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு அமைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 57 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா வெற்றி பெற்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அபேட்சகராகப் போட்டியிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, 'ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் பாராளுமன்றம் கலைக்கப்படும்' என்று தேர்தல் பிரசார காலத்தில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். அதற்கு ஏற்ப நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு தெளிவான புதிய ஆணையை வழங்கியுள்ளார்கள். அதேபோன்று பாராளுமன்றத்திற்கும் தெளிவான புதிய ஆணையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏனெனில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தொடர்பில் மக்கள் மத்தியில் பலவிதமான விமர்சனங்கள் காணப்படுகின்றன. நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையாகவே சேவை செய்பவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் திகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய பாராளுமன்றத்தைத் தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பு இத்தேர்தலின் ஊடாக மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அதற்கேற்ப எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 04 அம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட உள்ளன. அத்தோடு நேற்று முதல் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலுக்கு 11 பில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனாதிபதித் தேர்தலுக்காகப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலே பொதுத்தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் என்றுள்ளது.

இந்தச் சூழலில் நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான இப்பொதுத்தேர்தல் குறித்து ஒவ்வொரு அரசியல் கட்சியும் விஷேட கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள், சந்திப்புக்கள் இடம்பெற ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க பொதுத்தேர்தலில் போட்டியிடவும் மாட்டார். தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு வரவும் மாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இனியொரு தேர்தலிலும் போட்டியிட மாட்டேன் என்றுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான எவரையும் நாம் மீண்டும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றுள்ளது.

இதேவேளை 'நிபந்தனைகளின்றி சஜித் அணியுடன் இணையவும் பிரதமர் பதவியை விட்டுக் கொடுக்கவும் தயார்' என்று ஐ.தே.க முக்கியஸ்தர்கள் கூறியுள்ள போதிலும், 'முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டு இல்லை' என்றுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச, 'பொதுத்தேர்தலில் நானே பிரதமர் வேட்பாளர்' என்றுள்ளார்.

இவ்வாறு எதிர்வரும் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன. இதன் நிமித்தம் கட்சிகளுக்கு இடையிலும் கட்சிகளுக்குள்ளும் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

ஆனால் 'வளமான நாடும் அழகான வாழ்க்கையும்' மக்களது எதிர்பார்ப்பாக உள்ளது. மாற்றமும் மறுமலர்ச்சியும் மக்களின் விருப்பமாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பாரம்பரிய முறைப்படி அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் வாக்காளர்கள் நிராகரித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை தெரிவு செய்தது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். கடந்த 76 வருடங்களாக நாடும் மக்களும் அனுபவித்து வரும் துயரங்களையும் பின்னடைவுகளையும் முடிவுக் கொண்டுவர புதிய மக்கள் ஆணை இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# பாரம்பரிய அரசியல் முறைமைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள மக்கள்!

## மாற்றத்தை விரும்பியவர்கள் வழங்கியுள்ள ஆணை இது!



சுதந்திர இலங்கையின் 76 வருட அரசியல் வரலாற்றில் 2024 ஜனாதிபதித் தேர்தலானது மேல்தட்டு வர்க்கத்தின் ஆட்சி அதிகாரத்தைப் புரட்டிப்போட்டு, புதிய சகாப்தத்தை உருவாக்கியிருக்கிறது. 2022 'அரகலய' போராட்டத்தின் பின்னர் பெரும்பான்மைச் சமூகம் எதிர்பார்த்த முறைமை மாற்ற (system change) அரசியல் நிறைவேறியிருக்கின்றது. முறைமை மாற்றத்தை எதிர்பார்த்த அனுரகுமார திசாநாயக்கவிடம் ஆட்சி அதிகாரம் சென்றிருக்கிறது.

சாதாரண குடும்பத்தில் பிறந்து, மக்கள் விடுதலை முன்னணியில் செயற்பட்டு, பல சோதனைகளைச் சந்தித்து, அதன் பின்னர் ஜனநாயக வழிக்குத் திரும்பி, பல அரசியல் தோல்விகளையும் சந்தித்து 2024 இல் ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார் அனுரகுமார திசாநாயக்க.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது மேடைகளில் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் மாத்திரம் இனவாதம் பேசினார்கள். ஆனால் சிங்கள, பௌத்த பேரினவாத வேட்பாளர்கள் இம்முறை தேர்தல் பிரசாரங்களில் இனவாதம், மதவாதம் பேசாமல் செயற்பட்டமை 1956 இன் பின்னரான அரசி



யல் வரலாற்றில் புதிய நாகரிகமாக நோக்கப்பட்டது.

வேட்பாளர்கள் கட்டுப் பணம் செலுத்தியதில் இருந்து வாக்களிப்பு முடியும் வரை மிகக்குறைந்த வன்முறைச் சம்பவங்களுடன் அமைதியான முறையில் தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது. இது இலங்கை அரசியல் வரலாற்றில் மிகப் பெரிய மாற்றமாகும்.

அரகலய போராட்டத்தின் போது பெருமளவு மக்கள் கோரிய முறைமை மாற்றமானது தற்போது நி றைவேறியுள்ளதாக பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். இளைஞர் யுவதிகளும், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் கிராமிய மக்களும் தங்களுக்கு விடிவு பிறக்குமென்று இப்போது நம்பிக்கை கொண்டுள்ளனர்.

நாட்டில் நிலவிய இத்தனை நெருக்கடி நிலமைக்கும் காரணம் கடந்தகால ஆட்சியாளர்களும், உயர் அதிகாரிகளும், மேல்தட்டு வர்க்கத்தினரும் என்பதே பெரும்பாலான மக்களின் எண்ணமாகும். இதனை மாற்றி அமைப்பதற்கு நாட்டின் அரசியலில் முறைமை மாற்றம் தேவை என்பதை இத்தேர்தலில் மக்கள் உணர்த்தியிருக்கின்றனர்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட சிங்கள வாக்காளர்களில் 75 வீதத்துக்கு மேற்பட்டோர் அனுரவுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. வீடுவீடாகச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட இளைஞர்கள், தமது ஏழ்மை நிலையையும் கஷ்டங்களையும் கூறி, "இந்நிலை மாறுவதற்கு மாற்றம் தேவை, அந்த மாற்றத்தை உருவாக்குவதற்கு நமது தலைவருக்கு வாக்களியுங்கள்" என்று கோரினார்கள்.

அத்தோடு இலஞ்சம், ஊழல், மோசடி செய்தவர்களையும், கட்சி மாறியவர்களையும் எக்காரணம் கொண்டும் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ளாமல் இறுதி வரை தூய்மையைப் பாதுகாத்து வந்தனர். இவைதான் அனுரவின் வெற்றிக்குக் காரணங்களாக அமைந்தன.

தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாச அரகலய போராட்டக்காரர்களின் கோரிக்கையான முறைமை மாற்றம் பற்றிப் பேசிக் கொண்டு, மாறுபாடாகவே செயற்பட்டார். பழைய அரசியல் முறைமையையே அவர் நாடினார். இலஞ்சம், ஊழல், மோசடியில் ஈடுபட்டோரை அவர் தமது கட்சியில் சேர்த்துக் கொண்டதாக பலர் குற்றம் சாட்டினர். கட்சி மாறியோரை தம்முடன் இணைத்துக் கொள்வதிலும், கூட்டணி சேர்ப்பதிலும் அவர் ஆர்வம் காட்டியதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. மக்கள் எதிர்பார்த்த முறைமை மாற்றத்தில் அவர் கவனம் செலுத்தவில்லை என்பது பெரும்பான்மை மக்களின் குறையாக இருந்தது.

மக்கள் நாட்டில் மாற்றத்தையே வேண்டி நின்றனர். அந்த மாற்றத்துக்காக சிங்கள மக்கள் தெளிவாக வாக்களித்து அனுரகுமாரவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர் என்பதுதான் உண்மை.

இதேவேளை சிறுபான்மை மக்கள் 2000 இற்குப் பின்னர் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் தூரநோக்கற்றுச் செயற்பட்டு வந்திருக்கின்றனர். சிங்கள, பௌத்த மக்கள் தரப்பிலுள்ள பேரினவாதிகள் சிலர் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இனவாதமாகச் செயற்படும்போது, சிறுபான்மையினர் தனித்துவம் பேசாது சார்ந்து நின்று சாதிப்பதுதான் புத்திசாலித்தனமாகும்.

வடக்கு, கிழக்கு தமிழினத்தைப் பொறுத்தவரை 76 வருடகால அரசியல் வரலாற்றிலும், 30 வருடகால உள்நாட்டுப் போரிலும் எதனைச் சாதித்திருக்கின்றனர் என்ற வினா இங்கே எழுகின்றது. இழப்புகள்தான் எஞ்சின. உரிமை வேண்டிய 26 வருடகால ஆயுதப் போராட்டத்தினால் வடக்கு, கிழக்கு மக்கள் பலவற்றை இழந்திருக்கின்றனர். அவர்களில் பலர் வேதனைகள், வலிகளோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

## தமிழ் அரசியல்வாதிகளின் கற்பனாவாத கோஷங்களே வடக்கு, கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காததற்கான காரணம்!

காணாமல் போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, காணி, சொத்து, வாழ்வை இழந்தோர் பிரச்சினை, கடற்றொழிலாளர் பிரச்சினை எனப் பல பிரச்சினைகளோடு அவர்களில் பலர் வாழ்கின்றனர். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்ப்பு அரசியல் நடத்தி செயற்பட்டு எதனையும் சாதிக்க முடியாது என்பதனை தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் அரசியல்வாதிகளுக்கு வேலை இல்லாது போய்விடும் என்று மக்கள் கூறுவதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல் தெளிவில்லாமலேயே நீண்ட காலமாக வாக்களித்து வந்திருக்கின்றனர். தமிழ் அரசியல்வாதிகளின் வீரவசனங்களைக் கேட்டு தமிழ் மக்களில் பெரும்பாலானோர் தவறான முடிவில் வாக்களித்துள்ளனர். ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைத் தோற்கடிப்பதற்காகவே அவர்கள் வாக்களித்து வந்துள்ளனரே தவிர, தமிழினத்தின் பிரச்சினைகளை இணக்கப்பாட்டுடன் தீர்க்கக் கூடியவருக்கு அவர்கள் வாக்களிக்கவில்லை.

சார்ந்து நின்று வாக்களித்துக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தால் புரையோடிப் போயிருக்கின்ற தமிழரின் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்த்திருக்கலாம். முரண்டு பிடித்துச் செயற்பட்டதனால் தமிழ் மக்கள் பலவற்றை இழந்திருக்கின்றனர். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளாமல் நிறைவேறாத நம்பிக்கைகளை ஊட்டி, மக்களை உருவேற்றிய தமிழ் அரசியல்வாதிகள் பலர் உள்ளனர். தங்களது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதே அவர்களின் நோக்கமாகும்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களின் வாக்குவங்கி சிதறடிக்கப்பட்டுள்ளது. சஜித்தின் வாக்கு வங்கி சிங்கள மக்களிடம் இருந்து பத்து இலட்சம் வரை குறைந்திருக்கிறது. 2019 இல் அனுரவுக்கு இருந்த 4 வீத வாக்குவங்கி யாரும் எதிர்பார்க்காத வகையில் 42 வீதமாக அதிகரித்திருக்கிறது. வடக்கு, கிழக்கு மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் சஜித் அலை வீசியிருக்கிறது.

இன்றைய நிலையில் மக்கள் எதிர்பார்ப்பது இதுவேயாகும். இலஞ்சம், ஊழல், மோசடிகளை இல்லாதொழித்து, வீண்விரயங்களைத் தவிர்த்து, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து, விவசாயத் துறையையும் அது சார்ந்த உற்பத்தியாளர்களையும் பாதுகாத்து அமைதியான நாட்டை உருவாக்க வேண்டும் என்பது தான் மக்களின் விருப்பாகும்.



சின்னத்தம்பி குருபரன்
கொக்கட்டிச்சோலை

# அநுராதபுரம் மாவட்டத்தில் அரசியல் பிரபலங்கள் பலர் இருந்தும் அநுரகுமாரவுக்கே ஆதரவு அதிகம்

ஜனாதிபதித் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏழு தேர்தல் தொகுதிகளிலும் இரண்டு தேர்தல் தொகுதிகள் தவிர்ந்த ஏனைய ஐந்து தேர்தல் தொகுதிகளிலும் தபால் மூல வாக்களிப்பிலும், நாடளாவிய ரீதியாகவும் வரலாற்று ரீதியான வெற்றியொன்றைப் பதிவு செய்து இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 741,862 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில், 613,458 பேர் வாக்களித்திருந்ததுடன் 603,686 வாக்குகள் செல்லுபடியான வாக்குகளாகவும் 9,782 நிராகரிக்கப்பட்ட வாக்குகளும் பதிவாகியிருந்தன.

அநுராதபுரம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மக்கள் சக்திக்கு எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் இல்லாத நிலையில், இம்மாவட்டத்தில் பல பிரபல்யம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதும் அவர்களையும் பழைய பாரம்பரிய கட்சிகளையும் தோற்கடித்து அநுராகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.சந்திரசேன, செஹான் சேமசிங்க, துமிந்த திஸாநாயக்க, முத்துகுமாரன, வீரசேனகமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இஷாக் ரஹுமான் ஆகியோர் சுயாதீன வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும், ஐக்கிய மக்கள் சக்தியைச் சார்ந்த ரோஹன பண்டார வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்தும் தேர்தல் களத்தில் ஆதரவு தேடியிருந்தனர். ஆனபோதிலும் அநுரகுமாரவை வெற்றி கொள்ளமுடியவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் அநுராதபுரம் மாவட்டத்தில் இல்லாத போதிலும், பழைய பாரம்பரிய கட்சிகளை பின்தள்ளி அநுரகுமார திசாநாயக்க 285,944 வாக்குகளைப் பெற்று இம்மாவட்டத்தை வெற்றி பெற்றுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீது அதிக நம்பிக்கை வைத்து, சந்தர்ப்பவாத அரசியலுக்கு அப்பால் சிந்தித்து நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக மக்கள் அவரை வெற்றிபெறச் செய்துள்ளனர்.

வளமான பொருளாதாரத்திற்கும், அரச வளங்களின் சூறையாடலை தவிர்ப்பதற்கும், வளங்களை பாதுகாப்பதற்காகவும், ஊழலற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கும், பேதங்களற்ற இலங்கையை உருவாக்கவும் அவருக்கு மக்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

மதார் தம்பி ஆரிப்
அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

# ஏறாவூர் பொதுநூலகத்தில் தேசிய வாசிப்புமாத நிகழ்வுகள்

இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' எனும் தொனிப்பொருளுடன் கூடிய 2024ஆம் வருடத்திற்கான தேசிய வாசிப்பு மாத சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சுற்றுநிருபத்தினைப் பின்பற்றி இலங்கையிலுள்ள அனைத்து பொதுநூலகங்கள், பாடசாலை நூலகங்கள் மற்றும் பல்கலைக்கழக நூலகங்கள், விசேட நூலகங்கள் ஆகியன ஒவ்வொரு வருடமும் தேசிய வாசிப்பு மாத சிறப்பு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

ஏறாவூர் நகரசபை பொதுநூலகமானது 2024ஆம் வருடத்திற்கான தேசிய வாசிப்பு மாத செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது. வாசிப்பு மாதத்திற்கான தொனிப்பொருளுடன் கூடிய பதாதை வெளியீட்டுடன் ஆரம்பமான நிகழ்வில் 'அரபு எழுத்தணிப் போட்டி' நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொதுநூலகங்களில் பணிபுரிகின்ற நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்களுக்காக 'நிலைபெறான அபிவிருத்தி இலக்கு' தொடர்பான ஒருநாள் செயலமர்வு நடத்தப்பட்டது. ஏறாவூர் நகர சபை பொதுநூலகத்தின் நூலகர் திருமதி ஜெஸ்மின் கப்சா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நகரசபை செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை மற்றும் ஏறாவூர் நகரசபை ஆகியவற்றில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் அப்துல்லா ஹாருன் வளவாளராகப் பங்கேற்று இச்செயலமர்வை நடத்தினார்.





எஸ்.ஏ.ஸ்ரீதர்
வாழைச்சேனை தினகரன் நிருபர்

# மக்கள் மீதான வாழ்க்கைச் செலவு கட்டம் கட்டமாகக் குறைக்கப்படும்

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவிப்பு

**எங்களது வேலைத்திட்டங்களுக்கு உயிர் மூச்சாக இருந்தோருக்கு நன்றி**

பல தசாப்தங்களாக நாட்டில் நாம் எழுப்பிய குரலுக்கு மெது, மெதுவாக ஆனால் சீராக செவி சாய்த்து, நாங்கள் முன்வைத்த வேலைத்திட்டத்துக்கு உயிர்மூச்சாக இருந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் எங்களது கௌரவத்தைத் தெரிவிக்கிறோம். எங்கள் வேலைத் திட்டத்தில் உடன்படாத தரப்பினர் கூட நாங்கள் அடைந்த வெற்றியால் மகிழ்ச்சி அடைந்தால் மாத்திரமே, நீங்கள் அளித்த இந்த வெற்றி மேலும் பலமானதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, இந்த வெற்றியின் உரிமையை நம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். நமது அரசியல் இயக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, பல்வேறு அவதூறுகளையும், பொய்யான, திரிபுபடுத்தப்பட்ட தகவல்களையும் ஒதுக்கிவிட்டு, புதிய பரிசோதனைக்கு அஞ்சாமல், எமது அரசியல் இயக்கத்திற்கு நமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை வழங்கும் அளவுக்கு பெரும் உறுதியுடன் இருந்த பிரஜைகள் உட்பட அனைத்து மக்களுக்கும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்கு, தோள் கொடுப்பதற்கான பலம் இருக்குமென நாங்கள் நம்புகிறோம்.

இந்த வெற்றிக்காக எமக்கு முன்னரும், எங்களுடனும் பலவிதமான தியாகங்களைச் செய்த, சில சமயங்களில் தங்கள் உயிரைக்கூட தியாகம் செய்த பல தலைமுறைகளின் விலைமதிப்பற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரையும் நாங்கள் மரியாதையுடன் நினைவுகூருகிறோம். இந்த வெற்றியையும், அதன் மூலம் கட்டியெழுப்பப்படும் வளமான நாட்டையும் அவர்களுக்கு அளிக்கும் கௌரவமாகவே, நான் கருதுகிறேன்.

**பொருளாதாரத்தை நிரந்தர நிலைக்கு உயர்த்துவது அவசியம்**

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான பங்கை கூட்டுச் செயற்பாடாக நிறைவேற்றும் திறன் எமக்கு உள்ளது. அதற்கான மிகத் திறமையான குழு எங்களிடம் உள்ளது. நம் அனைவருக்கும் அது குறித்த முழுமையான உறுதிப்பாடு உள்ளது. நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த எத்தகைய மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு முன்னதாக பொருளாதாரத்தை நிரந்தரமான நிலைக்கு உயர்த்துவது அவசியமென நாம் நம்புகிறோம்.

அதற்காக நீண்டகால மத்திய கால திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர், பின்பற்ற வேண்டிய துரித பொருளாதார செயற்பாடுகளின் ஊடாக குறுங்கால ஸ்திரநிலையை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம்.

நாம் எதிர்பார்க்கும் மாற்றத்துக்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஆனால் அவை அனைத்தும் தற்போதைய பொருளாதாரத்தில் ஸ்திர நிலையையும் நம்பிக்கையும் கட்டியெழுப்புவதில் மாத்திரமே தங்கியுள்ளது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் துரிதமாக பேச்சுவார்த்தை ஆரம்பித்து, நீடிக்கப்பட்ட கடன் வசதியுடன் தொடர்புள்ள விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, சம்பந்தப்பட்ட கடன் தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அது தொடர்பான பணிகளை விரைவில் நிறைவு செய்து, உரிய கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்போம். அதற்கு இந்த நாட்டு மக்களைப் போலவே சர்வதேச சமூகத்தினதும் ஆதரவையும் பெற முடியுமென நம்புகிறோம். அந்த ஒத்துழைப்பின் மூலம் இந்த கூட்டு முயற்சியில் வெற்றி பெற முடியும் என, எதிர்பார்க்கிறோம்.

எமக்கு அதிகாரத்தை கையளிக்கையில் 'மாற்றம்' ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக் கருவே மக்களிடத்தில் ஆழமாக பதிந்திருந்தது. மாற்றம் என எமது நாட்டு மக்கள் கருதுவது அரசியல் முறைமையில் காணப்படும் அனைத்து விதமான மோசமான பண்புகளை மாற்றுவதையாகும். தற்போது அது நிரூப ணமாகியுள்ளது.

**தேர்தலின் பின்னர் வன்முறை இடம்பெறாத வரலாற்றுப் பதிவு**

இந்த நாட்டில் நடைபெற்ற அனைத்துவிதமான தேர்தல்களையும் நோக்கினால், தேர்தலுக்குப் பின்னரான எந்த வன்முறைச் சம்பவமும் நடைபெறாத ஒரேயொரு தேர்தலாக நாம் வெற்றியீட்டிய ஜனாதிபதித் தேர்தலே உள்ளது.

இது நமது நாட்டு மக்கள், எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இந்த நிலைமையை உறுதிப்படுத்தி நிலைப்படுத்துவது எமது நோக்கமாகும். அரசியலில் அதிகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்காக வியூகம் அமைப்பதற்கும் எவருக்கும் உரிமையுள்ளது. அரசியல் செய்யும் நேரத்தில் அரசியல் செய்வதற்கும், நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரத்தில் அதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் இந்த தருணத்தில் வலியுறுத்துகிறேன். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குகிறோம்.

சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பறங்கியர்களாக இருந்தாலும், மலேயர்களாக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் "நாம் இலங்கைப் பிரஜைகள்" என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச் சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதற்காக அரசியலமைப்பு ரீதியான, பொருளாதார. அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒரு போதும் நாம் பின்வாங்க மாட்டோம்.

தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத் தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந்நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத் திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

இந்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்காக அவற்றை செயல்படுத்த அவசியமான செயற்திறன்மிக்க மற்றும் நேர்மையான அதிகாரிகளை நியமிக்கும் பல நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கனவே நிறைவு செய்துள்ளோம். பொதுப் பணிக்கு இடையூறு ஏற்படாத மற்றும் பிரஜைகள் தொடர்பில் பாதகமான அழுத்தங்கள் ஏற்படாத வகையில், எதிர்பார்த்த மாற்றங்கள் படிப்படியாக மேற்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்.

சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்கவும், ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்கவும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அனைத்து பிரஜைகளினதும் சமூக பாதுகாப்பை உறுதி செய்வோம்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற எண்ணக்கருவை மீள உயிர்ப்பிப்போம்.

எமது நாட்டை கட்டியெழுப்புகையில் அரச சேவைக்கு பாரிய பங்கு இருக்கிறது என்பதை நம்புகிறோம்.

பொது மக்களை கண்ணியமாக நடத்தும் அரசாங்கத்தின் இலக்குகளை நோக்கிச் செல்லும் அரச சேவையை உருவாக்குவோம். செயற்றிறன் மிக்க, நேர்மையான மற்றும் ஜனரஞ்சகமான அரச சேவையை உருவாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு. அதற்கான நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டம் எங்களிடம் உள்ளது.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள அதிக வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தாய்க்கும் தந்தைக்கும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படும் நிலை ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

தமது பிள்ளைக்கு நல்ல பாடசாலை மற்றும் சிறந்த கல்வியை வழங்க அந்த ஒவ்வொரு பெற்றோருக்கும் உரிமை உண்டு. அனைத்து பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை வழங்கவும், அடுத்த தலைமுறையை பாதுகாக்கவும் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தி இளைஞர் சமூகத்துக்கு நம்பிக்கை ஏற்படக் கூடிய எதிர்காலத்தை உருவாக்குவோம். எந்த நாட்டுக்கும் நாம் சென்றாலும், விமான நிலையத்தின் தன்மையை வைத்து அந்த நாடு குறித்து ஒரு கண்ணோட்டத்தை உருவாக்க முடியும். அதன் ஒழுங்கு, மக்களின் நடத்தை, செயல்பாடு, போன்றவற்றின் மூலமும் மறைமுகமாக அந்த நாட்டின் இயல்பு எடுத்துக் காட்டப்படுகின்றது.

அதையும் தாண்டி சுற்றுச்சூழலின் தூய்மை, வீதிகளில் வாகனங்கள் செல்லும் விதம், முதியோரை நடத்தும் விதம், விருந்தோம்பல் செய்யும் முறை, விலங்குகள் எப்படி நடத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்த முடியும். நம் நாட்டின் பிம்பத்தை அதே வகையில் தெளிவாக தெரியும் வகையில் கட்டியெழுப்ப நாம் திட்டங்களை தயாரித்து முடித்துள்ளோம். அந்த உருவாக்கத்துக்காக குறுகிய கால, இடைக் கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நாட்டின் கடவுச்சீட்டை உலகமே மதிக்கும் நிலைக்கு, நாம் நாட்டை கட்டியெழுப்புவது அவசியம். இந்த நாட்டின் பிரஜைகளுக்கு 'நான் இலங்கையர்' என்று பெருமையுடன் கூறக்கூடிய நாட்டை உருவாக்குவது அவசியம். இந்த நாட்டின் பிரஜையாக இருப்பது பெருமை என்று நம் நாட்டு மக்கள் உணரும் வகையில், இந்த நாட்டை உருவாக்குவது அவசியம். அதற்கு உங்களின் கூட்டுப் பங்களிப்பு தேவை.

அனைத்து பிரஜைகளுக்கும் சமூக நீதியை நிறைவேற்றும் அரசொன்றை உருவாக்க நாம் பொறுப்புடன் பங்களிக்கிறோம். அறிவு, திறன்கள், கல்வி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தின் மூலம் எமது சிறுவர்கள் மற்றும் இளைஞர் சந்ததிக்கு நம்பகமான எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்புவோம்.

நமது நாட்டின் சனத் தொகையில் 52 வீதத்தைத் தாண்டிய பெண்கள் சமூகம், இந்நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகச் செயல்பாட்டிற்கு பெரும் பங்களிப்பைச் செய்யும் குழுவாகும். பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பாக அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நாம் செல்வோம்.

**பெண்களின் பிரதிநிதித்துவத்துக்கு மதிப்பளிக்க பெண் பிரதமர் நியமனம்**

சகல நிறுவனங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை பலப்படுத்துவதற்கு நாம் செயற்படுவோம்.

அதற்கான எமது அர்ப்பணிப்பின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்தும் வகையில் ஏற்கனவே எமது பிரதமர் பதவிக்கு பெண் ஒருவரை நியமித்துள்ளோம். எமது சனத்தொகையில் பெருந்தொகையானோர் ஊனமுற்று விசேட சமூக பாதுகாப்பு கிடைக்க வேண்டியவர்களாகும். அவர்களுக்காக பலமான சமூக பாதுகாப்பு கட்டமைப்பொன்றை நாம் திட்டமிட்டுள்ளதோடு அதன் குறுங்கால நடவடிக்கையை விரைவாக ஆரம்பிப்போம்.

நாம், செல்லும் பயணத்தில் சமூக கட்டமைப்பின் எந்தவொரு பகுதியையும் கைவிடப்போவதில்லை என்பதற்கு நாம் பொறுப்பு கூறுகிறோம். ஒவ்வொருவரினதும் தனித்துவத்திற்கு மதிப்பளித்து அவற்றை நாட்டின் முன்னேற்றத்துக்காக சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ள எமது பங்களிப்பை வழங்குவோம்.

மக்கள் இறைமைக்கு மதிப்பளிக்கும் அதேநேரம், அவர்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்போம். எம் மீதான சந்தேகம் காரணமாக நிச்சயமற்ற நபர்கள் இருப்பதை நாம் அறிவோம். எனது செயற்பாடுகளின் ஊடாக உங்களின் நம்பிக்கையை வெல்ல எதிர்பார்க்கிறேன்.

உங்களுடைய விமர்சனங்களை பொருத்தமான தருணத்தில் ஏற்றுக் கொள்வேன். அதேபோல் நாங்கள் கட்டியெழுப்ப போகும் எதிர்காலத்தின் பங்குதாரர்களாக உங்களை வலுவூட்டுவோம். எமக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை களைய முடியுமானால், நமக்கிடையிலான இலக்கு சமமானவை என நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

அதன் ஊடாக நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடியை ஏற்றுக் கொள்ளவும் அதன் ஊடாக முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான மூலோபாயங்களை இணைந்து திட்டமிடவும் முடியும்.

இந்த நாட்டை கட்டியெழுபுவதற்காக காத்திரமாகவும் நேர்மையாகவும் இணையும் அனைவருக்கும் எமது கதவுகள் திறந்துள்ளன. மக்களின் ஆணைக்கு அமைவான பாராளுமன்றம் ஒன்று அவசியப்படுகிறது. இறுதியாக இருந்த பாராளுமன்றம் மக்கள் ஆணையை திரிபுபடுத்தியதாக காணப்பட்டது. அதனால் பாராளுமன்றத்தை கலைக்க நடவடிக்கை எடுத்தேன்.

அரசியலமைப்புக்கு அமைவாக நாட்டை கொண்டு செல்வதற்காக எமது பாராளுமன்ற பிரநிதித்துவத்திற்கு அமைவாக அமைச்சரவை ஒன்றை நியமித்தேன். அன்றாடம் சூரியன் உதிக்கும் ஒவ்வொரு பொழுதிலும் மக்கள் காணும் கனவுகள் உள்ளன.

அது இன்று இருப்பதை விடவும் சிறந்த நாடாகும்!

ஆனாலும், பல வருடங்களாக அது கனவாகவே போய்விட்டது என்பதையும் நானும் அறிவேன்.

சந்தர்ப்பவாதம், அதிகாரமோகம், சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் உள்ளது..!

இருப்பினும், எமக்கு வரலாற்றில் நழுவவிட முடியாத சந்தர்ப்பமொன்று கிடைத்திருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவோம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.








## அம்பாறை மாவட்டத்தில் நெற் செய்கை ஆரம்பம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற் செய்கைக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பருவமழையைத் தொடர்ந்து விவசாயிகள் நெற்காணிகளை உழுது பண்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டச் செயலாளர் தலைமையில் நடாத்தப்படும் ஆரம்பக் கூட்டங்கள் இன்னும் நடைபெறாத நிலையில், விவசாயிகள் ஆரம்பப் பணிகளை முன்கூட்டியே முன்னெடுத்து வருகின்றனர். எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ம் திகதி முதல் விதைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இம்முறை பெரும்போகத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் நெல் செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீர்ப்பாசன வசதியில்லாத நெற்காணிப் பிரதேசங்களிலும் மழையை மாத்திரம் நம்பி நெல் செய்கை பண்ணப்படவுள்ளது. இதற்கேற்ற வகையில் விவசாயிகள் பணிகளை துரிதமாக முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த சிறுபோகத்தில் விவசாயிகளுக்கு சிறந்த விளைச்சல் கிடைத்ததனால், இம்முறை நெற்காணிகளுக்கான கிராக்கி அதிகரித்துள்ளது.

# ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு உலகத் தமிழர் பேரவை வாழ்த்து

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு உலகத் தமிழர் பேரவை வாழ்த்து தெரிவித்துள்ளது.

சிறுபான்மை மக்களின் நீண்டகால குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடவடிக்கைகளை மேற்கொள்வாரென, உலகத் தமிழர் பேரவை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அடிமட்டத்திலிருந்து ஆரம்பித்து இன்று ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள அநுரகுமார திஸாநாயக்கவின் சாதனை, இளைஞர்கள் மத்தியில் புதிய உத்வேகத்தை தோற்றுவிக்கும் எனவும் உலகத் தமிழர் பேரவை தனது வாழ்த்துசெய்தியில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் புதிய பெண் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் உலகத் தமிழர் பேரவை வாழ்த்து தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி அநுர குமார திசானாயக்கவிற்கு மலையக அபிவிருத்தி அமைப்பு வாழ்த்து



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9வது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுர குமார திசானாயக்காவுக்கு மலையக அபிவிருத்தி அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் சிவனயடியான் சொ.மகேந்திரன் ஜேபி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, புதிய மாற்றத்திற்கான பாதையில் ஆரம்ப அடித்தளமே அவரின் வெற்றியாகும்.

நாட்டின் சகல வளங்களையும் முறையாக பயன்படுத்தி, யுக்திகளை கையாண்டு சாந்தி, சமாதானம், நல்லிணக்கம் ஒற்றுமையினை மேற்கொண்டு இலங்கை திருநாட்டினை செல்வ செழிப்பு மிக்க நாடாகக் கொண்டு செல்ல வேண்டும்.

# கிராமிய கலைகள் ஒன்றிய எஸ். பி. பாலாவின் பாமாலை இசை நிகழ்ச்சி




அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வருடாந்தம் நடத்தும் பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் பாமாலை என்னும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 2024.09.29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு 11, செட்டியார் தெரு, கலயாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது. இதில் பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் பாடிய பாடல்களை கெரோக்கியில் பாடக்கூடிய பாடகர்கள் இருந்தால் இந்நிகழ்வில் பாடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாட விரும்புகிறவர்கள் என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணையை ரகு கனகநாதன் வழங்குகிறார்.

## லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு புதிய தலைவர்...

களனிப் பல்கலைக்கழகத்தில் வெகுஜன தொடர்பாடலில் முதுமாணிப் பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் பண்டாரவளை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்.

## பாராளுமன்றம் கலைப்பு;...

ஒரு கட்சியின் சார்பில் மாவட்ட ரீதியில் எந்தளவு வேட்பாளர்கள் போட்டியிட முடியும் என்ற எண்ணிக்கையை, எதிர்வரும் நாட்களில் தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டது. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவிப்புக்கமைய எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்பட உள்ளது. நவம்பர் 21ஆம் திகதி புதிய பாராளுமன்றம் கூடவுள்ளது. தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் எதிர்வரும் ஒக்டோபர் 04ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

அதேவேளை, பொதுத் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் விநியோகம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேட்புமனு தாக்கல் அக்டோபர் 04 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு;...

என்ற குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களுக்கு விசா வழங்கும் செயற்பாடுகளால்,முறைகேடுகள் இடம்பெறுவதாக தெரிவித்து ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் உள்ளிட்டவர்களால் அடிப்படை உரிமை மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களின் அடிப்படையில் மேற்படி கட்டுப்பாட்டாளர் எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு, உயர் நீதிமன்றம் உத்தரவு வழங்கியது. இருந்தபோதும் அவர் அதனை நடைமுறைப்படுத்த தவறியுள்ளார். அது தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது.இதையடுத்து

குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் எச்.இலுக்பிடியவை மேற்படி வழக்கின் விசாரணை நிறைவடையும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அதே வேளை,மேற்படி மனுவை எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## உத்தியோகபூர்வ வாகனங்கள்...

வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பயன்படுத்திய வாகனங்களை திருப்பி அனுப்புமாறு, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு ஒதுக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை, குறைக்கவுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# வடக்கு ரயில் சேவைகள் விரைவில் மீள ஆரம்பம்

## அமைச்சு செயலாளருடன் பேச்சு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்குக்கான ரயில் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சமிக்ஞை கட்டமைப்பு நவீனமயப்படுத்தல் மற்றும் ரயில் கடவைகள் பாதுகாப்பு செயற்பாடுகள் உள்ளிட்ட சில பணிகள் மீதமாக உள்ளதால் அவற்றை நிறைவு செய்து விரைவில் வடக்குக்கான ரயில் சேவையை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அந்த திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மஹவ அனுராதபுரத்துக்கிடையிலான ரயில் பாதை புனரமைப்பு திட்டம் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டது .அதன் காரணமாக கடந்த சில மாதங்கள் அந்த பாதை போக்குவரத்துக்கு முற்றாக மூடப்பட்டிருந்தது.

கடந்த மாதம் மீண்டும் அந்தப் பாதை திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த போதும் மேலும் சில பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதால் அது நடைபெறவில்லை.

# கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் முன்னாள் அதிபர் மகேசனின் நினைவுதினம்

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அபிவிருத்தி சங்கமும் பழைய மாணவர் சங்கமும் அகில இலங்கை சபரிமலை ஐயப்ப குருசுவாமிகள் ஒன்றியமும் இணைந்து முன்னாள் அதிபர் அமரர். மகேசன் நினைவுதினத்தை முன்னிட்டு பாடசாலையில் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இந்நிகழ்வு விவேகானந்தா கல்லூரியின் அதிபர் மூக்கப்பிள்ளை மூவேந்தர் தலைமையிலும் M.Z.M. பாரூக் (முன்னாள் ஆசிரியர்) முன்னிலையிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மொழிவாணன் (நீதிராஜா) (ஜனரஞ்சக எழுத்தாளர்), மங்களேஸ்வரி, கோ. நாகரத்தினம் (ஜோதிடர்), சி. சுந்தரத்தம்மாள், ஆறுமுகம் சங்கரலிங்கம், ச. ராமலெட்சுமி, க. சுப்பிரமணியம் (ஜெயராம்), சு. நர்மதா தவத்திரு ரெங்கதாஸ் விஜயானந்த் சுவாமி (தேவி ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயம்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வை எஸ். சீத்தாராமனும் பிரம்மஸ்ரீ சசாங்கன் சர்மாவும் தொகுத்து வழங்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் ஆறுமுகம் ரவிந்திரன் குருசுவாமி (தலைவர், அ.இ.ச. ஐயப்ப குருசாமிகள் ஒன்றியம்) வாழ்த்துரையும் பழைய மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவரான சோ. மீனாட்சிசுந்தரம் சிறப்புரையையும் சு. ரவிந்திரகுமார் நன்றியுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

முன்னாள் அதிபர் மகேசன் அவர்களின் 41வது வருட நினைவு தினத்தை முன்னிட்டு விவேகானந்தா கல்லூரியில் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவும் பரிசில் வழங்கலும் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களையும், மாணவர்களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர்.

# மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்களில் First Capital Holdings இற்கு முதலிடம்

LMD சஞ்சிகையால் தரப்படுத்தப்பட்டு வருகின்ற, இலங்கையிலுள்ள மிகவும் நன்மதிப்புடைய 100 நிறுவனங்கள் என்ற பெருமதிப்புமிக்க பட்டியலில் முதன் முறையாக தான் இடம்பெற்றுள்ளதை First Capital Holdings PLC நிறுவனம் பெருமையுடன் அறிவித்துள்ளது.

நிதியியல் பலம், மூலோபாய தலைமைத்துவம், தொழிற்பாட்டு மகத்துவம், நிறுவன ஆட்சி, ஊழியர்களின் நலன், ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்திற்கான பங்களிப்புக்கள் அடங்கலாக, பல்வகைப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் நிறுவனத்தின் மிகச் சிறப்பான பெறுபேற்றுத்திறனை இந்த அங்கீகாரம் பிரதிபலிக்கின்றது. மூலதனச் சந்தைகளில் 40 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள First Capital நிறுவனம், மிகச் சிறந்த தொழிற்பாடுகள் மற்றும் முன்னோக்குச் சிந்தனை அணுகுமுறை ஆகியவற்றுடன் தொழில்துறையில் முன்னிலை வகிக்கும் சக்தியாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

LMD சஞ்சிகையால் தரப்படுத்தப்பட்டு வருகின்ற, இலங்கையிலுள்ள மிகவும் நன்மதிப்புடைய 100 நிறுவனங்கள் என்ற பெருமதிப்புமிக்க பட்டியலில் முதன் முறையாக தான் இடம்பெற்றுள்ளதை First Capital Holdings PLC நிறுவனம் பெருமையுடன் அறிவித்துள்ளது. நிதியியல் பலம், மூலோபாய தலைமைத்துவம், தொழிற்பாட்டு மகத்துவம், நிறுவன ஆட்சி, ஊழியர்களின் நலன், ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்திற்கான பங்களிப்புக்கள் அடங்கலாக, பல்வகைப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் நிறுவனத்தின் மிகச் சிறப்பான பெறுபேற்றுத்திறனை இந்த அங்கீகாரம் பிரதிபலிக்கின்றது.

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு...

சவுத் மற்றும் பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மான் ஆகியோர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளதாக சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சு எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது.

அந்த செய்தியில் சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளதாவது: ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியாக அரசியலமைப்புப் பிரமாணம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அனுரகுமார திஸாநாயக்கவுக்கு இரண்டு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத் வாழ்த்து அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அனுரகுமார திஸாநாயக்கவுக்கு, பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் மொஹமட் பின் சல்மானும் வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறப்பான ஊடகக் கலாசாரத்தை...

அவர் கூறினார். வெகுஜன ஊடகத்துறை அமைச்சில் நேற்று (25) தனது கடமைகளை பொறுப்பேற்ற அமைச்சர், ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேபோன்று, ஏனைய அனைத்து மதங்களையும் பின்பற்றுவதற்கான உரிமை மற்றும் சுதந்திரத்தை பாதுகாப்பதும் தனக்குள்ள பொறுப்பென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நாட்டு மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதற்காக நாட்டு மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை பாதுகாக்கப்படும். ஜனாதிபதியின் வழிகாட்டலின்படி, கூட்டு முயற்சியின் மூலம் இந்த இலக்குகளை அடைவதற்கு ஊடகங்களின் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான தலையீட்டை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## IMF முகாமத்துவப் பணிப்பாளர்...

புதிய ஜனாதிபதிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள கிறிஸ்டலினா ஜோர்ஜுவா, இலங்கையின் பங்காளியாக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்குமிடையில் காணப்படும் பரஸ்பர சாதகமான உறவை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு இலக்குகளை அடைவதற்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் தயாராகவுள்ளதாகவும் புதிய ஜனாதிபதிக்கு கிறிஸ்டலினா ஜோர்ஜுவா உறுதியளித்துள்ளார்.

# இன்றைய பலன்கள்

## (26.09.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா**
**(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**

**மேஷம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைத்து தேவையான சலுகைகளை பெறுவர்.

**ரிஷபம் :**
பொருளாதாரம் உச்ச நிலையை அடையும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் இணக்கமாக நடந்து கொள்வர் .

**மிதுனம்:**
வரன்கள் வாசல் தேடி வரும். திருமண வயதை அடைந்த பிள்ளைகளுக்கு இதுனாள் வரை தள்ளிப்போன திருமணம் இப்போது கைகூடும்.

**கடகம்:**
தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொல்லைகள் அனைத்தும் விலகிச் செல்லும். தடைப்பட்ட காரியங்கள் ஒவ்வொன்றும் தானாக நடைபெறும்.

**சிம்மம்:**
ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். தொழிலில் படிப்படியாக வளர்ச்சி கண்டு பரவசம் அடைவீர்கள்.

**கன்னி:**
பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். பல முறை முயற்சித்து முடியாத காரியங்கள் இப்போது முடிவுக்கு வரும்.

**துலாம்:**
சகோதர ஒற்றுமை பலப்படும். தனவரவு தாராளமாக வந்து சேரும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
பொருளாதாரத்தில் உச்சநிலையை அடைவீர்கள். தொழிலை விரிவு செய்யும் முயற்சி கைகூடும். செல்வாக்கு மிக்க ஒருவரால் செயல்படுவது நல்லது.

**தனுசு:**
தொழில் முன்னேற்றம் உத்தியோகம் முன்னேற்றம் ஏற்படும். இடம் பூமி விற்பனையால் எதிர்பார்த்த லாபம் வரலாம்.

**மகரம்:**
இக்காலம் ஒரு இனிமையான காலமாகும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். நண்பர்களின் ஒத்துழைப்பு நல்ல விதமாக கிடைக்கும்.

**கும்பம்:**
எண்ணங்கள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களில் இருந்து பணிபுரிய அழைப்புகள் வரலாம்.

**மீனம்:**
பொருள் வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரையங்கள் இருமடங்காகும். வீடு மாற்றும் இடமாற்றம் உத்தியோகம் மாற்றம் நாடு மாற்றம் போன்றவை நிகழும்.

## பல்வேறு துறைகளிலும்... (02ஆம் பக்கத் தொடர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மேலும் கல்வியில் சிறந்து விளங்கும் வகையில் செழுமையும் முன்னேற்றமும் அடைய வாழ்த்துகிறேன். யாழ் பல்கலைக் கழகத்தின் கொழும்பு அத்தியாயத்தின் பழைய மாணவர்களான நாங்கள் இன்னும் எங்களின் கல்வி வேர்களைத் தேடி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செல்வோம் என நம்புகிறோம்.

எங்கள் வழிகாட்டிகளில் பெரும்பாலானோர் இப்போது இல்லை, ஆனால் எங்கள் முந்திய சகாக்களில் சிலர் எங்களை பழைய ரயில் நிலையத்தில் அல்லது விமான நிலையத்தில் சந்திப்பதாக உறுதியளித்துள்ளனர்.

இக்கட்டுரையின் எழுத்தாளர் கிங்ஸ்லி பெர்னார்ட், யாழ் பல்கலைக்கழகத்தின் முதல் தொகுதி மாணவர் என்பதுடன், இலங்கையில் பல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக சம்மேளனங்கள், சேவை வழங்கும் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் என்பவற்றில் அதிஉயர் பதவி வகித்ததுடன், லயன்ஸ் இன்டர்நேசனல் 306 டீ 2 இலங்கை, 2009–2010 வரையான காலப்பகுதியில் அதன் மாவட்ட ஆளுநராக கடமையாற்றியவர். அவர் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திசபையின் தற்போதைய தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார்.

## யாழ்.பல்கலை மாணவர்... (03ஆம பக்கத் தொடர்ச்சி)

இத் திட்டத்துக்கான ரூபா 30 இலட்சம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்துதுவர் ஸ்ரீசாய்முரளி, நிகழ்வில் கலந்து கொண்டு உதவித் தொகைக்கான காசோலையைக் கையளித்தார்.

இந்தியத் தூதரகத்தின் கல்வி மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பிரதித் துணைத் தூதுவர் கே. நாகராஜன் மற்றும் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அதிகாரிகள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பயன்பெறும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## இந்தியாவின் கேரளாவிலும்... (03ஆம பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட நபர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருடன் தொடர்புடைய சுமார் 29 நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவருடன் விமானத்தில் பயணித்த 37 பயணிகள் தற்போது வீட்டில் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அவர்களில் யாருக்கும் இதுவரை குரங்கம்மை தொற்று தொடர்பான அறிகுறிகள் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## G.C.E O/L பெறுபேறுகள்...

இந்த மாத இறுதிக்குள் சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

2023 கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த மே, மாதம் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் 3527 பரீட்சை நிலையங்களில் இந்த பரீட்சை நடத்தப்பட்டது.

4,52,979 பேர் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றிருந்தனர்.

இந்த பரீட்சைக்கு பாடசாலை ரீதியான பரீட்சாத்திகள் மூன்று லட்சத்து 87 ஆயிரத்து 648 பேரும் வெளிவாரி பரீட்சாத்திகள் 65,331 பேரும் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் நிலைபேறான...

உரிமைகள் மற்றும் கடந்தகால அநீதிகளுக்குப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் உண்மையான முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் அவசரப் பணியை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம் எதிர்கொள்கிறது. ஜனநாயக மற்றும் பொருளாதார ரீதியாக நிலையான எதிர்காலத்தை நாடுவதற்கு, இலங்கை மக்களுக்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளதாகவும் அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவின் தலைவர் பென் கார்டின் தெரிவித்துள்ளார்.

# நற்செய்தி மாநாடு

"அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் " மத்தேயு 24:2930

வருங்காலத்தைக் குறித்து அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை உலகில் யாவருக்கும் உண்டு. பலர் தங்கள் இவ்வுலக வாழ்க்கையில் என்ன நடக்கப்போகிறது என்பதை மட்டுமே அறிய விழைகின்றனர்.






இதற்காகப் பலரை நாடி பலவிதங்களில் வருங்காலத்தை அறிய முனைந்து ஏமாந்து போகின்றனர்.

ஆனால், வேதம் மட்டுமே ஒவ்வொரு மனிதனின் இறுதியையும் மனுக்குலத்திற்கு வரவிருப்பவற்றையும் தெளிவாகவும் சரியாகவும் கூறுகின்றது. மனுக்குலத்தைப் பொறுத்த அளவில் அடுத்து நடக்கவிருப்பது 'இரகசிய வருகை' கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்குப் பின்னர் இரகசிய வருகை இருக்கும் என்று சிலர் கூற முனைந்துள்ளனர். ஆயிரம் அரசாட்சி முடிந்ததும் வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு நடந்து புதியவானம் புதியபூமி ஏற்படுத்தப்பட்டு, பிதாவாகிய தேவனாகிய பூமிக்கு வந்து சேருவதையும் வேதாகமத்தில் வெளிப்படுத்தல் 20:421:10 இல் காண்கிறோம். இயேசு கிறிஸ்த்துவின் இரகசிய வருகையின்போது எடுத்துக்கொள்ளப்படாதவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் சிக்கித்தவிப்பார்கள் ஆகவே நாமும் மறுரூபமாக்கப்படுகிறவர்களாய் ஒரேநேரத்தில் மேகங்கள்மேல் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆகாயத்தில் கிறிஸ்துவைச் சந்திக்கவும், அங்கிருந்து அவருடன் பரலோகதிற்குச் சென்று அவர் ஆயத்தம் பண்ணிவைத்த உறைவிடங்களை சென்றடையவும் பாத்திரவான்களாக இருப்பதே எங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.



இதன்படி கடந்த வாரங்களில் உலகளாவிய ஜெப ஊழியத்தின் ஸ்தாபகர் போதகர். நொயல் ஆம்ருஸ் தலைமையில் இலங்கையில் பல இடங்களில் நற்செய்தி மாநாடு, போதகர்கள் ஒன்றுக்கூடல் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு கூட்டங்கள் ஒழுங்குச்செய்யப்பட்டிருந்தன. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தும் ஒரு தேவ மனிதர், இந்தியா தேசத்திலிருந்து வருகைத்தந்திருந்த சகோதரன். எம். டி. ஜெகன் அவர்கள் 'சபை, கிறிஸ்துவின் வருகை, விசுவாசிகளின் நிலை, கடைசி கால பரிசுத்த வேதாகம அடையாளங்கள், ஊழியம் அழைப்பு இன்றைய நிலை,

வாலிப வயதில் கிறிஸ்துவோடு நடத்தல் போன்ற தலைப்புக்களில் தேவ செய்தியை பகிர்ந்துக் கொண்டார்.

நாம், தேவனுடைய வார்த்தைகளை கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பி விழித்திருக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

உபத்திரவ காலத்துக்கு தப்பி இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கத் தகுதியுடையவர்களாக இருக்கும்படி நாம் ஜெபம் செய்வோம்.

வெளிப்படுத்தல் 3:5 "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்." ஆமென்.

**தேவதாஸ் சவரிமுத்து**
**சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்**

# கற்பிட்டியில் பல்கலைக்கழக மாணவர்கள் கௌரவிப்பு



**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலையில் இவ்வருடம் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகிய மற்றும் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு கற்பிட்டி வை.எம்.எம்.ஏ. கிளையினரால் பதக்கமும் சான்றிதழ்களும் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு செவ்வாய்க்கிழமை (24) கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலையின் தம்பி நெய்னா மரிக்கார் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கற்பிட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஜவாத், கௌரவ அதிதிகளாக அல் அக்ஷா தேசிய பாடசாலை அதிபர் யூ.எம்.எம். அமீர், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. புத்தளம் மாவட்ட பணிப்பாளர் முஜாஹித் நிசார், அல் அக்ஷா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.எம்.எம். ரோஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



விழாவில் பல்கலைக்கழக மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அதற்கு உறுதுணையாக செயல்பட்ட 10 ஆசிரியர்களும் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது விஷேட நிகழ்வு ஒன்றாக அதிதிகளும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# கட்டுகெலியாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கட்டட திறப்பு விழா

## குவைத் தூதரக அதிகாரிகள் பங்கேற்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

கலன்பிந்துனுவெவ கல்வி வலயத்திற்குட்பட்ட மிகிந்தலை கனந்தரா கட்டுகெலியாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் குவைத் அரசாங்கத்தின் இஸ்லாமியக் கெயா சொசைட்டி நிறுவனத்தின் ஊடாக குவைத் நாட்டைச் சேர்ந்த பரோபகாரி ஹயாஅந் நபீசி ( Haya An Nabeeshi ) யின் நிதியுதவியில் அல் ஹிமா இஸ்லாமிய சமூக சேவை அமைப்பின் வேண்டுகோளின்பேரில் மேற்படி பாடசாலையின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நான்கு வகுப்பறைகளை கொண்ட மாடி கட்டடத்தின் திறப்பு விழா எதிர்வரும் அக்டோபர் 02ஆம் திகதி முற்பகல் 9:30 மணிக்கு வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் ஏ.எம்.நௌபர் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாப் எம் எம் புதையிர் மற்றும் இலங்கை குவைத் தூதரக விசேட பிரதிநிதி அஷ்ஷெய்க் பிர்தௌஸ் (நளீமி) உட்பட கௌரவ அதிதிகளாக அல் ஹிமா இஸ்லாமிய நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஏ. ஏ. நூருல்லா ( நளீமி ), அந் நிறுவனத்தின் தலைவர் எம். எஸ். ஏ. புஹாரி, நிறுவனத்தின் வடமாகாண செயலாளர் எஸ். முகம்மது ஜாபீர், கலன்பிந்துனுவெவ கல்வி வலய பணிப்பாளர் திருமதி இமாலி நகன்தலா, உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். நவாஸ் உட்பட அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் பாடசாலையின் அதிபர், பிரதி உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பொதுமக்கள் உட்பட நலன்விரும்பிகள் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

# களுத்துறை செயலக ஊடக பிரதானியின் மாமியார் காலமானார்

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**



களுத்துறை மாவட்ட செயலக ஊடகப்பிரிவின் பிரதானியான அரசாங்க தகவல் திணைக்கள தகவல் அதிகாரி சமன் குலரத்னவின் மாமியார் மல்காந்தி ரணவீர (வயது 59) காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பிடிகல வைஹேன பொது மயானத்தில் நேற்று (25) இடம்பெற்றது. மாவட்ட செயலக அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டனர்.

# உடல் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வு

கொழும்பு, புறக்கோட்டை அரிமா சங்கம், முகத்துவாரம் தெற்கு அரிமா சங்கத்துடன் இணைந்து நடத்தும், உடல் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வு, எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது, நீரிழிவு, சிறுவர் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெறும். அத்துடன், இலவச கண் பரிசோதனையும், நீரிழிவு பரிசோதனையும் மேற்கொள்ளப்படும்.



அக்குறணை, மல்வானஹின்ன முஸ்லிம் வித்தியாலய மாணவர்கள் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்று (25) கொழும்பு வந்தனர். பாடசாலை அதிபர் எம்.எம்.எம். இம்றான் தலைமையில் வருகை தந்த மாணவர்கள், லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின் எடுத்துக்கொண்ட படம். **படம்:திலக் பெரேரா**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.09.24
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | திகதி | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | ஏனையவை | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5605 | | R | 9 5 1 3 0 4 | | ரூ.29,456,148.00 |
| அத சம்பத | 180 | | R | 1 3 0 4 | | |
| கொவிசெத | 3847 | 2024.09.24 | N | 16 51 53 56 | விசேட எழுத்து N; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 82874 | ரூ.64,090,699.16 |
| Mega Power | 1953 | 2024.09.24 | P | 33 42 71 77 | சுப்பர் இலக்கம் 05; 53457; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.446,896,646.00 |
| Lucky 7 VIP | 431 | 2024.09.24 | Z | 0 1 5 4 2 0 | L7 எழுத்து Z | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.20,236,536.16 |
| ராசி சுப பலன் | 914 | 2024.09.24 | | 05 30 38 41 | வெற்றி இலக்கினம் கும்பம்; தனயோக இலக்கம் 46573; நாளுக்கான விதி எண் 20 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,236,714.80 |
| தன நிதானய | 1635 | 2024.09.24 | K | 05 10 28 47 | விசேட எழுத்து K; இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 22968 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.80,863,576.48 |

# கிழக்கின் குரல்



அம்பாறை மாவட்டத்தில்

## பெரும்போக நெற்செய்கை பணியில் விவசாயிகள் ஆர்வம்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பருவ மழையை தொடர்ந்து தமது வயல்களை உழுது பண்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி முதல் நெல் விதைப்புப் பணி முன்னெடுக்கப்படுமென்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

இம்முறை பெரும்போகத்தின் போது அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் பெரும்போக நெற்செய்கை முன்னெடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுவதுடன், நீர்ப்பாசன வசதியின்றிய பிரதேசங்களில் மழைநீரை மாத்திரம் நம்பி நெற்செய்கை முன்னெடுக்கப்படும். இதற்கேற்ற வகையில் தமது பெரும்போக நெற்செய்கை பணியை துரிதமாக முன்னெடுத்து வருவதாகவும், விவசாயிகள் குறிப்பிட்டனர்.

கடந்த சிறுபோகத்தின் போது சிறந்த விளைச்சல் விவசாயிகளுக்கு கிடைத்துள்ளதால், இம்முறை வயல்களுக்கு கிராக்கி அதிகரித்து காணப்படுவதுடன், கடந்த போகங்களை விடவும் இம்முறை பெரும்போகத்தில்வயல்களுக்கானகுத்தகை அதிகரித்துள்ளதாகவும், விவசாயிகள் கூறினர்.



இம்முறை பெரும்போகச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு தேவையான விதை நெல்லை மாவட்டத்திலுள்ள விதை நெல் உற்பத்தியாளர்கள் வழங்கி வருகின்றனர். எனினும் சில பிரதேசங்களில் விதை நெல் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. விதை நெல்லை நியாய விலையில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அம்பாறை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## புதிய ஜனாதிபதி அநுரகுமார சகலரையும் ஒன்றிணைத்துள்ளார்

முன்னாள் எம்.பி. அலி சாஹீர் மௌலானா தெரிவிப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அனைத்து மக்களையும் ஒன்றிணைத்துள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹீர் மௌலானா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்கவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து தரப்பு மக்களும் பகிர்ந்துகொள்ளும் வகையில் பொது ஆணையை வென்றெடுப்பதற்காக நீங்கள் ஒரு தேசத்தை ஒன்றிணைத்துள்ளமை தேர்தல் முடிவின் மூலம் தெளிவாகிறது.

நீங்கள் முன்னோக்கி செல்லும் பாதை நீண்ட, வலிமையானதாக இருக்கும். உங்களுடன் பலமாக இருக்கும் எமது மக்களின் விருப்பத்துடன் நீங்கள் சவால்களை வென்று இலக்கை அடைவீர்களென்று நான் நம்புகிறேன்" என்றார்.

## தென்கிழக்கு பல்கலையில் உள்ளக வீதி புனரமைப்பு பணி



அம்பாறை மத்திய நிருபர்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் உள்ளக வீதிகளை புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இஸ்லாமிய கற்கைகள் பீடத்துக்கு முன்பாகவுள்ள வீதியின் புனரமைப்பு பணி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கான நிகழ்வில் பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் கலந்துகொண்டார். மேலும் இந்நிகழ்வில் முகாமைத்துவ வர்த்தக பீட பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம்.எம்.முஸ்தபா, முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம். மஷாகிர், இஸ்லாமிய கற்கைகள் திணைக்களத் தலைவர் கலாநிதி எஸ்.எம்.முகம்மட் நபீஸ், அரபுமொழித்துறை தலைவர் கலாநிதி ஏ.எம். றாசிக், சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விஷப்பாம்புகள் அதிகரிப்பு; காணிகளை துப்புரவாக்கவும்

மூதூர் தினகரன் நிருபர்



திருகோணமலையின் மூதூர் மேற்கில் நாணல் சேனை, உப்புக்காச்சிமடு பிரதேசங்களில் பராமரிப்பின்றி காணப்படும் தோட்டக் காணிகளில் விஷப் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும் இதனால் தாம் அச்சமடைந்துள்ளதாகவும், அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஆகையால் பராமரிப்பின்றி காணப்படும் காணிகளை துப்புரவு செய்து உதவுமாறும் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்தி சங்கத்தினூடாக அக்காணி உரிமையாளர்களிடம் அப்பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பலருக்கு சொந்தமான தோட்டக் காணிகள் பராமரிப்பின்றிய நிலையில் பற்றை வளர்ந்து, செடிகொடிகள் வளர்ந்து, காடு மண்டிக் காணப்படுவதுடன், இப்பற்றைகளிலிருந்தே விஷப் பாம்புகள் வெளிவருகின்றன.

இந்நிலையில் இப்பற்றை காணிகளை அண்டிய வீதி வழியாக இரவில் பயணிக்கும் தாம் பாம்புகளின் நடமாட்டத்தை கண்டு பெரும் அச்சமடைவதாகவும், நாணல் சேனை மற்றும் உப்புக்காச்சிமடு பிரதேசவாசிகள் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் பொதுமக்கள் போக்குவரத்து மற்றும் பாதுகாப்புக்கு உதவுமாறு உரிய காணி உரிமையாளர்களிடம் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்தி சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மோ. சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணிப்போர் விவகாரம்

காரைதீவில் நடைமுறை திட்டம்

காரைதீவு குறூப் நிருபர்



அம்பாறையின் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடங்களில் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து பயணிப்போர் தொடர்பாக விரைவில் விசேட நடவடிக்கை நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக, காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ஜெயலத் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணிப்போர் இரண்டு பக்கங்களுக்குமாக கால்களை வைத்துக்கொண்டு அமர்ந்து பயணிக்க வேண்டுமென்று தெரிவித்த அவர், ஒரு பக்கமாக கால்களை வைத்து பயணிப்பதாலேயே விபத்துகள் சம்பவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

மோட்டார் போக்குவரத்து சட்டத்துக்கமைய மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணிப்போர் இரண்டு பக்கங்களுக்கும் கால்களை வைத்து அமர்ந்து பயணிக்க வேண்டுமெனவும், அவர் கூறினார்.

ஆகையால் காரைதீவில் அநியாயமான உயிரிழப்புகளை தவிர்க்கும் வகையில் இந்த நடைமுறை மிக விரைவில் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் இது தொடர்பான அறிவித்தலை பொது மக்களுக்கு ஊடகங்கள் மூலமாக தெரியப்படுத்துவதாகவும், அவர் குறிப்பிட்டார்.

## இலக்கியத்துறை பங்களிப்புக்காக பட்டம் வழங்கி கௌரவிப்பு

மருதமுனை தினகரன் விசேட நிருபர்




இலக்கியத்துறைக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்காக கல்முனை பொது நூலக உதவியாளரான ஷிபானா அஸீம் 'லங்காபுத்ர, தேசபந்து கவியருவி பட்டம்' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஐக்கிய சுயதொழில் வியாபாரிகள் சங்கம் மற்றும் எமது நாட்டின் சகல கலைஞர்களையும் ஒன்றிணைக்கும் தேசிய கலை அரண் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பும் சர்வதேச பௌத்த சம்மேளனமும் இணைந்து 'வாழும் போதே வாழ்த்துவோம்' எனும் தொனிப் பொருளின் கீழ் தேசிய கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வை அண்மையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தியது. இதன் போதே மருதமுனையைச் சேர்ந்த அவர் கௌரவிக்கப்பட்டார்.

கலைஞர்களின் திறமை, உள்ளார்ந்த சிறப்பு, சிறந்த சேவைகளில் தமது துறைக்கேற்றவாறு திறமையை வெளிப்படுத்தியோருக்கே கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கில்

## இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கு 2025 இல் வருடாந்த இடமாற்ற நடவடிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கு 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பதில் பிரதி பிரதம செயலாளர் இஸட்.ஏ.எம்.பைஸல் தெரிவித்தார்.

புதிய இடமாற்றங்கள் அனைத்தும் 2025 மார்ச் 3ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமென்பதுடன், அதற்கேற்ப இடமாற்ற உத்தியோகத்தர்கள் விடுவிப்பு செய்யப்பட வேண்டுமென்றும் திணைக்களங்கள் மற்றும் நிறுவன தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரம் அடங்கிய சுற்றுநிருபம் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், நிறுவன தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலையில் நிலையமொன்றில் தொடர்ந்து பல வருடங்களாக சேவையாற்றுகின்ற முகாமைத்துவ சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாரதிகள், அலுவலக பணியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவை உத்தியோகத்தர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

இடமாற்ற விண்ணப்பத்துக்கு இணையவழியினூடாக விண்ணப்பிக்க வேண்டும். www.ppaep.lk அல்லது கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளத்தினுடாக விண்ணப்பிக்க அறிவிக்கப்பட்டுள்ளது.

இணையவழி மூலமான விண்ணப்ப இறுதியில் விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து வன்பிரதிகளை ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதி பிரதம செயலாளர், பிரதி பிரதம செயலாளர் அலுவலகம், கன்னியா வீதி வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின்

## வெற்றிக்கு வாக்களித்த மூதூர் மக்களுக்கு நன்றி தெரிவிப்பு

மூதூர் தினகரன் நிருபர்

இலங்கையின் புதிய ஜனாதிபதியான அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்கு மூதூர் பிரதேசத்திலிருந்து வாக்களித்த மூவின மக்களுக்கும் தேசிய மக்கள் சக்தியின் மூதூர் பிரதான அலுவலகத்தால் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஒன்றிணைவோம் வெல்வோம்' எனும் கருப்பொருளின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இந்த நாட்டை பொருளாதார ரீதியாகவும் ஊழல், மோசடி அற்ற நிலையிலும் முன்னேறி மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

அதற்கான முன்னெடுப்பில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 'வளமான நாடு அழகான நாளை' எனும் மாற்றத்துக்காக மூதூர் பிரதேச மக்கள் பெறுமதியாக உணர்ந்து வாக்களித்தமைக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் கணக்கெடுப்பு செயலமர்வு

கிண்ணியா மத்திய நிருபர்

2024ஆம் ஆண்டுக்குரிய மக்கள் கணக்கெடுப்புக்கான உத்தியோகத்தர்களுக்கு 3 நாட்கள் கொண்ட செயலமர்வு நேற்று கிண்ணியா பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிண்ணியா பிரதேச செயலாளரும் தொகை மதிப்பு பிரதி ஆணையாளருமான எம்.எச்.எம். கனியின் தலைமையில் இந்த செயலமர்வு நடத்தப்படுகிறது.

## சாய்ந்தமருதில் டெங்கு அபாயம்; அவதானமாக இருக்க அறிவுறுத்து

மாளிகைக்காடு குறூப் நிருபர்


அம்பாறையின் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்குநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களை மிகவும் அவதானத்துடன் நடக்குமாறு, சுகாதார வைத்திய அதிகாரி அர்ஸத் காரியப்பர் அறிவுறுத்தினார்.

சாய்ந்தமருதின் பொலிவேரியன் வீட்டுத்திட்ட இடம் மற்றும் கரையோர பிரதேசங்களில் அதிகளவான டெங்கு நுளம்புப் பெருக்கம் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், இதைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இடைவிட்ட மழை மற்றும் வெப்பமான காலநிலையால் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு சாதகமான சூழல் தோற்றுவிக்கப்படக் கூடுமென்பதால் பொதுமக்கள் தத்தமது வீடுகள், சுற்றுச்சூழல், நீர் தேங்கும் பொருட்கள் மற்றும் இடங்கள், கடற்கரையில் தரித்து வைக்கப்படும் தோணிகள், படகுகள் போன்றவை தொடர்பாக அவதானத்துடன் நடக்குமாறும், அவர் குறிப்பிட்டார். ஆகையால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொது மக்களை அவர் கேட்டுக்கொண்டார். இதேவேளை சாய்ந்தமருது கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை வளாகங்கள் மற்றும் சுற்றுச்சூழலில் வாரத்துக்கு ஒரு முறை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதானத்தை முன்னெடுக்குமாறு பாடசாலை அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் குடியிருப்பு பிரதேச வடிகான்களில் நீண்டகாலமாக கழிவுநீர் தேங்கியுள்ளதாகவும் இது தொடர்பாக கல்முனை மாநகரசபையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## குடும்ப பெண் சடலமாக மீட்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



மட்டக்களப்பின் களுதாவளை நான்காம் பிரிவில் பாலர் பாடசாலை வீதியை அண்டிய வீடொன்றிலிருந்து குடும்பப் பெண்ணினது சடலம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டது. தனியார் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த 44 வயதுடைய சசிகுமார் கௌரியே சடலமாக மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வீட்டில் கணவன், மனைவி இருவரும் வசித்து வந்ததாகவும் இவர்களுக்கிடையில் அவ்வப்போது தகராறு இடம்பெறுவதாகவும், அயலவர்கள் தெரிவித்தனர். சம்பவதினத்தன்று தனது மகளின் தொலைபேசிக்கு இவரது தாய் பல தடவைகள் அழைப்பை ஏற்படுத்திய போதும், தொலைபேசி இயங்கவில்லை. இதனைத் தொடர்ந்து உயிரிழந்தவரது சகோதரர், சகோதரியின் வீட்டுக்கு சென்ற போது வீடு பூட்டியிருந்ததுடன், இவரது செருப்பு வீட்டின் முன்பாக இருந்தது.

இந்நிலையில் சகோதரர் சந்தேகமடைந்து களுவாஞ்சிக்குடி பொலிஸில் முறைப்பாடு செய்ததுடன், வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு உட்சென்ற போது படுக்கையில் இரத்தம் தோய்ந்த நிலையில் அப்பெண் உயிரிழந்து காணப்பட்டார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியதுடன், சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# வட, கிழக்கு தமிழர் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்

(மன்னார் குறூப் நிருபர்)

ஜனாதிபதி வடக்கு , கிழக்கு தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நினைவில் வைத்து தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென முன்னாள் எம்.பி சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் என்னை சந்தித்து கதைத்த போது இனவாத மற்ற, இலஞ்சம் ஊழலற்ற இலங்கையை உருவாக்குவதற்கு தாம் பாடுபடுவதாகவும் என்னிடம் உறுதியளித்திருந்தார். அந்தவகையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்க தனது உறுதி மொழியை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும்.



ஜனாதிபதி தேர்தலின் போது நான் யாருக்காகவும், யார் சார்பாகவும் எந்த விடயங்களையும் கூறவில்லை. மக்கள் யாரை விரும்பி வாக்களிக்கின்றார்கள். அது அவர்களின் விருப்பம்.

பல்வேறு பட்ட குழப்பங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைத்து மன்னார் மாவட்டத்தில் காணப்பட்ட சில பிரச்சினைகளுக்கு தீர்வை முன் வைத்தேன். முல்லைத்தீவில் ஏற்பட பிரச்சினைகளுக்கும் அவர் ஊடாக தீர்வை பெற்றுக் கொடுத்தேன்.

மக்களின் பிரச்சினைகளை நான் அவரிடம் முன் வைத்த போது சில விடயங்களை சுமூகமான முறையில் தீர்த்து வைத்ததாக அவர் தெரிவித்தார்.

வடக்கின் உதயம்

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் அணிசெய் கலைஞர்களின் இன்னிசைக் கச்சேரி

(கரவெட்டி தினகரன் நிருபர்)



யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் அண்மையில் சாகித்தியனின் தெய்வீக இன்னிசை கச்சேரி நடைபெற்றது.

இதில் முகர்சிங் ர.காணாமிர்த சர்மாவும் தபேலா, நடேசு செல்வச்சந்திரனும் ஹார்மோனியம், உ.ஹிதுதனும் மிருதங்கம் கலாவித்தகர் மகேந்திரம் பிரபா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக இணைந்திருந்தனர்.

இதேவேளை யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கின்ற மாணவி, யா/ மகாஜனக் கல்லூரியில் தரம் 08 இல் கல்வி கற்கின்ற மாணவி,

நீர்வேலி தெற்கை சேர்ந்த தரம் 06 இல் கல்வி கற்கும் 02 மாணவர்கள் ஆகியோருக்கும் தலா ஒவ்வொரு துவிச்சக்கரவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிர முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் திருமுன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் ஓய்வு பெற்ற ஆசிரியர் சிவநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள் உறுப்பினர்கள், பக்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த 15ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பகுதியில் கேப்பாப்பிளவு கிராமத்தை சேர்ந்த ஒரு குடும்பத்துக்கு ரூ.66,000 பெறுமதியான கடற்றொழில் மீன்பிடி வலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.



யாழ். முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால், யாழ்.முஸ்லிம் சமூக ஜோதி விருது வழங்கும் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கும் எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷனின் எம்.எஸ்.ஜாபிருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட போது எடுக்கப்பட்ட படம்.

கஞ்சாவுடன் ஒருவர் கைது

## சான்றுப் பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் மாந்தை மேற்கு பகுதியில் மூன்று கிலோ கஞ்சாவுடன் ஒருவர் நேற்று மாந்தை மேற்கு பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் தள்ளாடி இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப்படை ( STF) அதிகாரிகளின் உளவுப் பிரிவினருடன் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ரூ.12 இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரால் விற்பனைக்காக பொதி செய்யப்பட்ட மூன்று கிலோ 570 கிராம் கஞ்சா அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் மற்றும் சான்றுப் பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவித்தொகை



(யாழ். விசேட நிருபர்)

இலங்கையின் வடக்கு கிழக்கு பிராந்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட பின்தங்கிய மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கல்விக்கான நிதியுதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் இருந்து சுமார் 100 மாணவர்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்துக்கான ரூபா 30 இலட்சம் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத்தூதுவர் ஸ்ரீ சாய்முரளி இந்நிகழ்வில் கலந்து கொண்டு உதவித் தொகைக்கான காசோலையைக் கையளித்தார்.

இந்தியத் தூதரகத்தின் கல்வி மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பிரதித் துணைத் தூதுவர் ஸ்ரீ கே. நாகராஜன் மற்றும் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அதிகாரிகள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பயன்பெறும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு வந்தாறுமூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

## சமூகநலன் கருதி இலங்கையை சுற்றி நடைபவனி வரும் இளைஞன்

(ஓமந்தை விசேட நிருபர்)




சமூக நலன் கருதி கொழும்பு மட்டக்குளியை சேர்ந்த இளைஞனொருவன் இலங்கையை சுற்றி நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார். அதன்படி 24ஆவது நாளான நேற்று புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

பல்வேறு இலக்குகளை முன் வைத்து இவர் நடைப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இளைஞன் புற்றுநோயாளர்களுக்காக நிதி சேகரித்து அவர்களுக்கான சிகிச்சை வழங்குவது, இளைஞர்களை போதைவஸ்துக்கு அடிமையாகாமல் பாதுகாக்க வேண்டும், வறுமையில் வீதிகளில் தவிக்கும் உறவுகளின் தரவுகளை திரட்டி சமூகவலைதளங்கள் ஊடாக உதவி கோரி உதவிகளை பெற்றுக் கொடுப்பது என மூன்று இலக்குகளை வைத்து நடைப்பயணத்தில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த இளைஞனின் செயற்பாட்டை பார்த்த மக்கள் அனைவரும் அதிசயமாக பார்த்து வருவதும் குறிப்பிடத்தக்கது.



மலைச்சாரல்

புதிய ஜனாதிபதி

## நாட்டை பொறுப்பேற்ற பின் முன்னேற்றம் மலர்ந்துள்ளது

(மாத்தளை சுழற்சி நிருபர்)



இனவாதம், மதவாதமற்ற தேசிய மக்கள் சக்தி கொள்கை மீது நம்பிக்கை வைத்து, நாட்டின் மூவின சமூகத்தினரும் ஒன்றிணைந்து, 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்கவை தெரிவு செய்துள்ளதாக மாத்தளை மாவட்ட தேசிய மக்கள் சக்தி கட்சியின் நிறைவேற்றுகுழு உறுப்பினர் ஹவ்ப் ஹனீபா ஹாஜியார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம்(24) மாத்தளை நகரில் இடம்பெற்ற தேர்தல் வெற்றியை கொண்டாடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்த அவர்,

புதிய ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றதன் பின்னர் நாட்டின் முன்னேற்றம் மலர்ந்துள்ளது. இம் முன்னேற்றத்தை கண்டு இந்நாட்டில் வசிக்கும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கத்தோலிக்க சமூகத்தினர் தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

கடந்தகால தேர்தல் மேடைகளில் சில அரசியல் கட்சிகள் இனவாதம், மதவாதம் பேசி மக்களை ஏமாற்றி திசைத்திருப்பி வந்தனர். அவ்வாறான அரசியல்வாதிகளுக்கு இத்தேர்தலில் மக்கள் தகுந்த பாடத்தை புகட்டியுள்ளனர்.

நாட்டு மக்களின் தேவையை உணராது சொகுசு வாழ்கையில் வாழ்ந்த அரசியல்வாதிகளுக்கு இத் தேர்தல் நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

நிர்வாக திறமையும் நாட்டை ஆட்சி செய்யும் ஆளுமைக்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலிலும் மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பொய் பிரசாரங்கள் செய்தவர்கள்

## ஜனாதிபதி அநுரகுமாரவை இன்று வாழ்த்துகிறார்கள்

மலையக மக்கள் சக்தியின் தலைவர் இராமன் செந்தூரன்

ஹட்டன் விசேட நிருபர்



ஜனாதிபதி தேர்தலின் போது மலையக மக்களை திசை திருப்பவதற்காக போலி பிரசாரங்களை செய்த மலையக அரசியல் கட்சிகளும் தலைவர்களும், ஜனாதிபதியாகவுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு இன்று வாழ்த்துக்களை தெரிவித்து வருவது மிகவும் வேடிக்கையாகவுள்ளதாக மலையக மக்கள் சக்தியின் தலைவர் இராமன் செந்தூரன் தெரிவித்தார்.

கொட்டகலை நகரில் நேற்று (25) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இதனை தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக பதிவிப்பிரமாணம் செய்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மலையக மக்கள் சக்தியும் மலையக மக்களும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமையடைகின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, நுவரெலியா மாவட்டத்தில் வெறும் 5,000 வாக்குகளையே பெற்றிருந்த அவர், இம்முறை 105,000 வாக்குகளை பெற்றுள்ளார். இந்த வாக்கு வீதம் இன்னும் அதிகரித்திருந்திருக்கலாம். மலையக தலைவர்களின் போலி பிரசாரங்களினாலேயே வாக்குகள் குறைந்தன.

அப்பேற்பட்டவர்கள் இன்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு கைலாகு செய்து வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

அவ்வாறாயின், தேர்தல் நேரத்தில் முன்வைக்கப்பட்ட போலி பிரசாரங்கள் தொடர்பாக மக்கள் சிந்தித்து பார்க்கவேண்டும்.

பாராளுமன்ற தேர்தலின்போது, அவரது கட்சிக்கு பாராளுமன்றத்தில் அதிகமான ஆசனங்கள் கிடைப்பதனூடாகவே மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதி நிறைவேற்ற முடியும்.

எனவே, மக்கள் இதனை உணர்ந்து அவரது கட்சிக்கு வாக்களித்து அதிமான பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு முன்வரவேண்டும். ஜனாதிபதியின் கைகளை பலப்படுத்துவதனூடாக மலையக மக்கள் பல்வேறு நன்மைகளை பெற்றிட முடியும் என அவர் தெரிவித்தார்.

## போலி ஆவணங்கள் தயாரித்து மணல் அகழ்வு வியாபாரம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இங்கிரிய பிரதேசத்தில், சட்டத்துக்கு முரணாகப் போலி ஆவணங்கள் தயாரித்து மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நபர்களை கனிய வள ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் நேற்று(25) கைதுசெய்துள்ளனர்.

வியாபாரத்தை நடத்தி வந்தவர்கள், 2022 ஆம் ஆண்டு பெறப்பட்டிருந்த காலாவதியான அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தி, அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த இடங்களையும் தாண்டி, வேறு பல இடங்களிலும் சுற்றாடல் மற்றும் பௌதிக வளத்தை பாதிக்கின்ற வகையில் பாரிய குழிகளை தோண்டி வகை தொகையன்றி மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, போலி ஆவணங்களை தயாரித்து, சட்டத்துக்கு முரணாக மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த அனைவரையும் கைது செய்த அதிகாரிகள், இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக தெரிவித்தனர்.

## வெள்ளவாய பகுதியில் 20 ஏக்கர் வனப்பகுதி காட்டுத்தீயால் அழிவு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கல்தோட்டை வெள்ளவாய வீதியில் கொடவெஹெரமங்கட பாதுகாப்பு வனப்பிரதேசத்தில், நேற்று முன்தினம் (25) ஏற்பட்ட காட்டுத்தீ மிக வேகமாக பரவியதில் சுமார் 20 ஏக்கருக்கும் மேற்பட்ட வனப்பகுதி அழிவடைந்துள்ளதாக வனவளப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத் தீப்பரவல் நேற்று (25) அதிகாலை முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப் பிரதேசத்தில் நிலவும் காற்றுடன் கூடிய வரட்சி நிலைமையினால் தீ வேகமாக பரவியதாக தெரிவித்த வன வள அதிகாரிகள் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி அநுரவின் வெற்றிக்காக பங்களித்தோருக்கு நன்றி, பாராட்டு!

கலாநிதி பி.பி சிவப்பிரகாசம்

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்காகப் பங்களித்த அனைவருக்கும் நன்றி கூறுவதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் கலாநிதி.பி.பி. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் மலையக தேசியக் குழு உறுப்பினரும், கண்டி மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், சர்வதேச விவசாய தொழிலாளர் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமுமான சிவப்பிரகாசம் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய மாற்றத்துக்காக, புதிய சிந்தனையோடு செயற்படும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை பாராட்டுகின்றேன். இலங்கைவாழ் மக்கள், இன,மத, பிரதேச, அரசியல் பிரிவினைகளுக்கு அப்பால் மக்கள் ஆட்சியை கொண்டு வருவதற்காக உழைத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மக்களில் அநேகமானவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் இந்நாட்டின் மறுமலர்ச்சிக்காக உழைத்துள்ளார்கள். மக்கள் இலங்கைத்தீவின் எதிர் காலத்துக்காக, வளமான நாட்டுக்காக, அழகான வாழ்க்கைக்காக இதனைச் செய்துள்ளார்கள். மக்களுடைய பொறுப்பு இத்தோடு முடிந்து விட்டதாக எண்ணி விடலாகாது. இது ஒரு மக்கள் ஆட்சிக்கான ஆரம்பம் மட்டுமே" எனத் தெரிவித்தார்.



## சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் குற்றவாளிக்கு 30 வருடம் சிறை

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை, பெலிஹுல்ஓய, மியனவில பகுதியில், 16 வயது சிறுமியொருவரை கடத்திச்சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு 30 வருட சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெலிஹுல்ஓய மியனவில பகுதியைச் சேர்ந்த நிஹால் குணதிலக என்பவருக்கே இந்த சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

16 வருடங்களுக்கு முன்னர், மியனவில பகுதியில், 16 வயதுடைய சிறுமியொருவர் கடத்திச் செல்லப்பட்டு பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, இரத்தினபுரி மேல் முறையிட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று (25) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.யு.எஸ்.எம்.கே.செனவிரத்ன, சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர், மூன்று குற்றங்களிலும் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டதால் ஒரு குற்றத்துக்கு 10 வருடம் வீதம் 30 வருட சிறை தண்டனை அளித்து தீர்ப்பளிப்பதாகவும் பாதிக்கப்பட்ட யுவதிக்கு 3 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்குமாறும் உத்தரவிட்டார்.

ஒன்றரை வயது குழந்தை

## கழுத்து நெறிக்கப்பட்டு கொலை; தாய் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

கலஹா பகுதியில் தனது பெண் குழந்தையை கொலை செய்த குற்றச்சாட்டில் குழந்தையின் தாய் கைது செய்யப்பட்டுள்ளதாக கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு வயது மற்றும் 05 மாதங்களேயான பெண் குழந்தையொன்றே இவ்வாறு மூச்சுத் தினர வைத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவத்தில் கலஹா பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய குழந்தையின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

மண்முனை மேற்கு வவுணதீவில்

# பெரும்போக செய்கை விவசாயிகளுக்கு முன்னாயத்த விவசாய கூட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான முன்னாயத்த விவசாய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.


மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையிலும் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் நமசிவாயம் சத்தியானந்தியின் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மத்திய நீர்ப்பாசன மற்றும் மாகாண நீர்ப்பாசன திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் விவசாய செய்கை நிலங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு, பல விடயங்களுக்கு இறுதி தீர்மானங்களும் எட்டப்பட்டன.

இதன்போது மத்திய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 12 ஆயிரத்து 19 ஏக்கர் நீர்ப்பாசன காணியிலும் 4 ஆயிரத்து 505 ஏக்கர் மானாவாரி காணியிலும் மாகாண நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 935 ஏக்கரிலும் மானாவாரி நெற்செய்கையின் கீழ் 17,290 ஏக்கரிலும் இப்பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதியில் விதைப்பு நடவடிக்கைகளை முடிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இந்தக் கூட்டத்தில் மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர், விவசாய திணைக்களத்தின் மாவட்ட பிரதி பணிப்பாளர், கமநல திணைக்கள உதவி ஆணையாளர் உள்ளிட்ட பல துறைசார் அதிகாரிகள், விவசாய பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதிய ஜனாதிபதி அநுரவுக்கு கணேஸ்வரன் வேலாயுதம் வாழ்த்து



நாட்டில் சமூக நீதியையும் ஊழலுக்கு எதிரான நாட்டையும் கட்டியெழுப்புகின்ற வெற்றியாகவே புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றியை நான் பார்க்கிறேன். அதேசமயம், பாராளுமன்றத் தேர்தலிலும் அவர் வெற்றிபெற்று பொருளாதார ரீதியில் நலிவடைந்துள்ள வர்க்கத்தினருக்கு விமோசனத்தைப் பெற்றுத் தரும் சிறந்த தலைவராக தொடர்ந்து மிளிர வேண்டும் என நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம் என்று சிவன் பவுண்டேசன் நிறுவனத்தின் இயக்குனர் கணேஸ்வரன் வேலாயுதம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தனது செய்தியில், ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டில் புரையோடிக் காணப்படுகின்ற சமூக நீதியையும் மற்றும் ஊழல் நிறைந்த ஆட்சியையும் இல்லாமற் செய்ய வேண்டும் என்கின்ற ஒரு நற்செய்தியை வெளிப்படுத்துவதற்கான ஒரு பலப்பரீட்சையான தேர்தல் என்று குறிப்பிடலாம்.

இதற்கு நாட்டு மக்கள் ஒன்றிணைந்து தங்களது ஆதரவைத் தெரிவித்து அநுர குமார திசாநாயக்கவை வெற்றிபெற செய்துள்ளார்கள். இது ஒரு மகத்தான வெற்றியாகும்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் இந்தக் கொள்கைப் பிரகடனத்தின் ஊடாகவே இத்தேர்தலை தேசிய மக்கள் சக்தி வெற்றியை உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**இக்பால் அலி**

# கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் விருது வழங்கி கௌரவிப்பு

**எம்.எஸ்.எம். ஸாகிர்**

ஓய்வுபெற்ற ஆசிரியரும் பன்னூலாசிரியரும் சிரேஷ்ட எழுத்தாளருமான கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் அயராத பங்களிப்புகளுக்காக "கலாகீர்த்தி, கலாபுத்ர, தேசபந்து" எனும் கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனமும் இணைந்து, 'தேசிய கலை அரண்' அமைப்பின் ஏற்பாட்டில் "வாழும்போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப்பொருளில் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோதே, இவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.




இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகமாகச் செயற்பட்ட சமன் ரத்னபிரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, இந்திக விஜய்ரத்ன, மாநகர முதல்வர் கஜீவ மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் வெளிநாட்டு விவகார பணிப்பாளர் சுனில் பெரேரா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கம் கோரிக்கை

**மன்னார் குறுப் நிருபர்**

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இந்நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. பகைமையை அன்பால் தணிக்க முடியும் என்னும் புத்தரின் போதனையை நிலை நிறுத்துங்கள் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்விடயம் குறித்து தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

மதவாதம், இனவாதம் தேசியவாதத்திற்கு எதிரானது. தேசியவாதம் என்பது தேசிய இனங்களின் சுயநிர்ணய சமத்துவ இருப்பியலை கேள்விக்கு உட்படுத்தாது. சமநீதிக் குட்பட்டதே இடதுசாரி கோட்பாடு இதை நடைமுறைப்படுத்த வேண்டும்.



இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இந்த நாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. பகைமையை பகைமையால் தணிக்க முடியாது. பகைமையை அன்பால் தணிக்க முடியும் என்னும் புத்தரின் போதனையை நிலை நிறுத்துங்கள். எவருக்கும் தீங்கற்ற பஞ்சசீல கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எமது நீதிபூர்வமான கோரிக்கையை இதுவரை எந்த ஆட்சியாளரும் புரிந்து கொண்டதாக வரலாறு இல்லை என்பதே வேதனைக்குரிய கசப்பான உண்மை.

எனவே கடந்த கால கசப்புணர்வுகளுக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோருங்கள். உலகத்தில் ஜனநாயகம் பெரு வளர்ச்சியடைந்து விட்டது.

ஜப்பான் ஹிரோஷிமா நகர தாக்குதலுக்காக அமெரிக்கா வருந்துவதாக அவர் தெரிவித்தார்.


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
கட்டிடங்கள் திணைக்களம்

**கேள்விகளுக்கான அழைப்பு**

**கிளிநொச்சி, சமூக சேவைகள் திணைக்களம், மாற்றுத் திறனாளி பிள்ளைகளுக்கான தொழில் பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல் - கட்டம் III**

(ஒப்பந்த இலக்கம்: **BD-288C-Z2-17/CT050/24**)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 25.9 மில்லியன் ரூபா (வட் வரியின்றி) மதிப்பீட்டுச் செலவுடையதுமான ''கிளிநொச்சி, சமூக சேவைகள் திணைக்களம், மாற்றுத் திறனாளி பிள்ளைகளுக்கான தொழில் பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல் கட்டம் III" எனும் பணிகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழு தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 126 நாட்கள்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்கம் மற்றும் 03/2020ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) கட்டிட நிர்மாணத் துறைக்காக C5 அல்லது C4 தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை *(Original Certificate of PCA 03)* கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். *PCA 03* பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது."
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 2), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4..00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 021-2222781 தொலைநகல்: 021-2222781
5. மீளளிக்கப்படாத கட்டணமாக ஆறாயிரம் ரூபாவை (ரூபா 6,000.00) 2024-09-26ஆம் திகதி முதல் 2024-10-16ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 2), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2024-10-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடத் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்லை, செத்சிறிபாய, கட்டிடங்கள் திணைக்களத்தின் 2ம் மாடியின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் தெரிவுசெய்யட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 91 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 9ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 350,000.00 ரூபா தொகைக்கு
   * 2025 பெப்ரவரி 13ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட

கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. (திருமதி) K.G.S. குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய", பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**






மாணவர்களின் திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 01, தரம் 04 வரையிலான மாணவர்களின் சந்தை பாடசாலை வளாகத்தில் (24) இடம்பெற்றபோது பிடித்த படம். **( படங்கள் அநுராதபுரம் மேற்கு தினகரன்,கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்)**

# கேகாலை சென்மேரிஸ் கல்லூரி பிரதி அதிபர் காலமானார்



ஹெம்மாதகம, மடுள்போவவைச் சேர்ந்த கேகாலை சென்மேரிஸ் கல்லூரியில் கடமையாற்றிய பிரதி அதிபர் எம். பி.எம். முஸம்மில் சுகயீன முற்றிருந்த நிலையில் தனது 55 ஆவது வயதில் காலமானார். இவர், மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் ஆசிரியை ஏ.டப்லியூ. எப். ரிஸானாவின் கணவரும் பாத்திமா அனீகா, அமான் ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார். அன்னாரின் ஜனாஸா நேற்று (25) ளுஹர் தொழுகையைத் தொடர்ந்து மடுள்போவ ஜும்ஆ மஸ்ஜித் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் ஜனாஸாவில் உலமாக்கள், பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# நீரில் மூழ்கி ஒருவர் பலி

**அக்குறணை குறுப் நிருபர்**

மாத்தளை, சுதுகங்கை ஆற்றில் நண்பர்களுடன் நீராடச் சென்ற ஒருவர், மூழ்கி உயிரிழந்துள்ளதாக மாத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று (25) புதன் கிழமை கண்டெடுக்கப்பட்டதாகவும், மாத்தளை, கனங்கமுவ என்ற இடத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொட்டகமுவ, கனகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய டப்ளியூ. டி. யசோதர பண்டார என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.



தனது இரு நண்பர்களுடன் ஆற்றில் நீராடச் சென்ற இந்த நபர், ஒரு பக்கக் கரையிலிருந்து மறுபக்க கரையை நீந்திச் செல்ல முயற்சித்த போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கிராமவாசிகளின் தேடுதலையடுத்து சடலம் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்தாக தெரிவித்த மாத்தளை பொலிஸார், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# 71ஆவது மீலாதுன் நபி போட்டி நிகழ்வுகள் 2024

**புத்தளம் தினகரன் நிருபர்**

சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் (MICH) நாடளாவிய ரீதியில் 71 ஆவது வருட மீலாதுன் நபி விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் ஹிப்ழ், Calligraphy, Multimedia Presentations மற்றும் பேச்சு போட்டிகள் போன்ற பல்வேறு போட்டிகள் மூன்று மொழிகளிலும் இடம்பெறவுள்ளன.

நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள இந்த போட்டிகளுக்கான விண்ணப்பங்களின் இறுதித் திகதி ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதியாகும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள MICH அலுவலகத்தை 0112 328928 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது 0743944791 எனும் வாட்சப் இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல் (IFB)**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கட்டுமான நடவடிக்கைகளுக்காக**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   I. **RDA/GAM/EE/TEN/2024-59** - மினுவன்கொட - கம்பஹா - மிரிஸ்வத்த வீதியை (Ch 12+220Km - 14+000Km) மேம்படுத்தல்
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2225033**

SELACINE



**இலங்கை துறைமுக அதிகார சபை**

**திருத்தம் பற்றிய அறிவித்தல்**

1. 2024 ஆகஸ்ட் 29 மற்றும் 30ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் கேள்வி 2024 செப்டெம்பர் 23ஆம் திகதி திறக்கப்படுவதாக ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் கேள்விகள் முடிவுறுத்தப்படும் திகதி பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | முன்பு பிரசுரிக்கப்பட்ட முடிவுறுத்தப்படும் திகதி | புதிய முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| CMS/LP/24/ PT/05/012 | 01 No. Air Compressor ( 1000L/ 12 Bars ) | 2024-09-23 பி.ப. 1.30 மணி | 2024-10-01 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/19/006 | 62 Nos. Split Type Air Conditioners | 2024-09-23 பி.ப. 1.30 மணி | 2024-10-01 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/04/060 | 1440000 – Nos. – Food Grade PE Coated Paper Lunch Box | 2024-09-23 பி.ப. 1.30 மணி | 2024-10-01 பி.ப. 1.30 மணி |

ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01.**
**தொலைபேசி எண்கள்:** 2482231, 2483338, 2482832, 2482409, 2483024, 2482652

DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

MINISTRY OF IRRIGATION

## REQUEST FOR BIDS (RFB)

Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.N.:8996-LK)

NATIONAL COMPETITIVE BIDDING

**Supply, Installation, Commissioning & Testing of Automated Real-Time Monitoring Stations in Major Reservoir Schemes**

Contract No: SLMOI/CRES/ID/G/NCB/26

## Extension Notice

**Bid Submission Deadline for Supply, Installation, Commissioning & Testing of Automated Real-Time Monitoring Stations in Major Reservoir Schemes :**

**SLMOI/CRES/ID/G/NCB/26 will be extended till 25th October 2024 at or before 11.00 a.m.**

**Chairman,**
**Project Procurement Committee,**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach,**
**No. 11, Jawatta Road,**
**Colombo 05.**

25th September 2024

The Housewives' companion
Classifieds on
Daily News

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**"2025 – 2026ஆம் வருடங்களுக்கான தீயணைக்கும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் மீள்நிரப்பும்" ஒப்பந்தத்திற்காக விலைக்கோரல்**

**B/59/2024**

"2025-2026ஆம் வருடங்களுக்கான தீயணைக்கும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் மீள்நிரப்பும்" ஒப்பந்தத்திற்காக புகழ்பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 ரூபாவை (ரூ. 1,653.58 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-10-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/.

விலைமனுக்கள் 2024-10-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

தெளிவுபடுத்தல்கள் (ஏதுமிருப்பின்) 011-2106762 நீடிப்பு 338 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது supplies@ceypetco.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-2106762 நீடிப்பு 338**
**மின்னஞ்சல்: supplies@ceypetco.gov.lk**

Uva Wellassa University

### ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## கேள்வி நீடித்தல் அறிவித்தல்

2024 செப்டெம்பர் 01ம் திகதி சண்டே ஒப்சர்வர், சிலுமின, வாரமஞ்சரி மற்றும் ஊவா வெல்லஸ்ஸ உத்தியோகபூர்வ இணையதளத்தில் விளம்பரப்படுத்தப்பட்ட கீழ்க்காணும் கேள்விகள் , கீழ்க்காணுமாறு நீடிக்கப்படுவதாக இலங்கை வாழ் மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| இல. | விபரம் | கேள்வி இல. | நீடிக்கப்பட்ட விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 01 | Supply, Delivery and Installation of Desktop Computers, Centralized UPS and Centralized Server for Faculty of Medicine and Department of Information and Communication Technology - Faculty of Technological Studies of Uva Wellassa University | UWU/G/NC/B/C/24/01 | 01/10/2024 02.00 PM |
| 02 | Supply, Delivery and Installation of Laboratory Equipment for Uva Wellassa University - (Package I) | UWU/G/NC/B/C/24/02 | 01/10/2024 02.30 PM |

கேள்விகள் மேலே குறிப்பிடப்படும் நேரத்தில் மூடப்படும் அத்துடன் சமுகமளிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற விலைமனுதாரர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்கப்பட மாட்டாது.

மேலதிக விபரங்களை பிரதிநிதியாளர் (களஞ்சியம் மற்றும் வழங்கல்கள்) இடமிருந்து தொ.பே.இல-055-2226475 ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**பல்கலைக்கழக பெறுகைக் குழு (பாரிய)**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பதுளை**
**24.09.2024**

## கொள்முதல் அறிவிப்புகள்

## மொனராகலை பிரதேசசபை

மொனராகலை பிரதேச சபை மூலம் பின்வரும் சொத்துக்கள் 2025.01.01 திகதி முதல் 2025.12.31 வரை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து சீல் செய்யப்பட்ட ஏலங்கள் கோரப்படுகின்றன. அது தொடர்பாக டெண்டர் விண்ணப்பங்கள் மொனராகலை பிரதேச சபையிலிருந்து மட்டுமே விநியோகிக்கப்படும்.

- **குத்தகை விண்ணப்பங்கள் விநியோகம் - 2024.09.26 திகதி முதல் 2024.10.16ஆம் திகதி மாலை 3.00 மணிவரை**
- **குத்தகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி - 2024.10.17ஆம் திகதி மு.ப 11.00 மணி வரை.**
- **குத்தகை விண்ணப்பங்களைத் திறப்பது - 2024.10.17ஆம் திகதி மு.ப 11.15 வரை**

| இல | சொத்துக்களின் விபரம் | குறைந்த பட்ச ஏலம் (ரூபா) | ஏலபாதுகாப்பு பிணை வைப்பு (ரூபா) | ஏல ஆவணங்களின் செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மொனராகலை வார இறுதி சந்தை / மொத்த சந்தை | 6,651,000.00 | 332,550.00 | 10,000.00 |
| 02 | இல 03 மாட்டிறைச்சி விற்பனை நிலையம் | 3,150,000.00 | 157,000.00 | 10,000.00 |
| 03 | புதிய வணிக வளாக அருகில் உள்ள வாகனத் தரிப்பிடம் | 1,300,000.00 | 65,000.00 | 7,000.00 |
| 04 | ஹுலந்தாவ பசுமை பூங்காவில் உள்ள ஹெல உணவகம் | 133,000.00 | 6,650.00 | 5,000.00 |
| 05 | இல 01 மீன் விற்பனை நிலையம் | 148,000.00 | 7,400.00 | 2,500.00 |
| 06 | இல 02 மரக்கறி மீன் விற்பனை நிலையம் | 136,000.00 | 6,800.00 | 2,500.00 |
| 07 | இல 04 கோழி விற்பனை நிலையம் | 106,000.00 | 5,300.00 | 2,500.00 |
| 08 | இல 05 மீன் விற்பனை நிலையம் | 113,000.00 | 5,600.00 | 2,500.00 |
| 09 | இல 06 மீன் விற்பனை நிலையம் | 113,000.00 | 5,600.00 | 2,500.00 |
| 10 | கும்புக்கனை சுற்றுலா நிலையத்தில் வாகன தரிப்பிட நிலையம் | 30,000.00 | 1,500.00 | 2,500.00 |
| 11 | கும்புக்கனை சுற்றுலா நிலையத்தில் பொது மலசல கூடம் | 30,000.00 | 1,500.00 | 2,500.00 |
| 12 | மொத்த விற்பனை சந்தையின் மலசலகூடம் | 85,000.00 | 4,250.00 | 2,500.00 |
| 13 | புதிய வணிக வளாக பொது மலசலகூடம் | 63,000.00 | 3,200.00 | 2,500.00 |
| 14 | புதிய பேருந்து தரிப்பிட பொது மலசலகூடம் மற்றும் பொது வசதிகள் | 3,728,000.00 | 186,000.00 | 10,000.00 |

02. வியாபர நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் குத்தகைக்கு வழங்குவதற்காக, இலங்கை பிரஜைகளுக்கு, தனியார் இலங்கை பிரஜை அல்லது இலங்கை பிரஜையாகிய பங்குடைமை நிறுவனங்கள், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகிய நபர்கள் ஏலங்களை சமர்ப்பிக்கலாம்.

03. ஏலதாரர்கள் மேலதிக தகவல்களை பெற மற்றும் ஏல ஆவணங்களை ஆய்வு செய்வதற்கும் ஏல ஆவணங்களை வாங்குவதற்கும் பின்வரும் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

**செயலாளர், மொனராகலை பிரதேச சபை**
**தொலைபேசி இல - 055 2276175**
**தொலைநகல் - 055 2276175**
**மின்னஞ்சல்முகவரி - mon.prasabawa@gmail.com**

04. மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் www.monaragalaps.gov.lk இலிருந்தும் **monaragalapradeshiyasabha** முகநூல் பக்கத்திற்குச் செல்லவும்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



Sunday Observer
adz it's what you want





- Auto Focus
- Vehicle Rent / Wanted
adz Magazine Issued with Sunday Observer



- Photo Classifieds
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Hot Line - 011 2 429 369/ 011 2 429 368
E-mail - adzsuo@gmail.com

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## விலைமனுக்கோரல் (IFB)

**புத்தளம், லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி போக்குவரத்து செய்யும், நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு சென்று வருவதற்கு படகு சேவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் - 2024/2025 காலத்திற்கான**

**தேசிய விலைமனுக்கோரல் போட்டி (NCB)**

**ஒப்பந்த இலக்கம் : CSC/BT/2024/25**

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் வழங்கற் சபை தலைவரினால் (DPC) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் புத்தளம், லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி போக்குவரத்து செய்யும், நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு சென்று வருவதற்கு படகு சேவை வழங்குவதற்கான முன் அனுபவம் மிக்க மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

1. இந்த சேவையை பெற்றக்கொள்வது **2024 ஒக்டோபர் முதல் 2025 ஜுன்** வரை மாத்திரமே.
2. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
3. படகில் ஒரே தடவையில் (குறைந்தது) 10 பேர் வரை பாதுகாப்பாக பயணிக்கக்கூடியவாறு வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒரே நேரத்தில் பயணிகள் தவிர்த்து 500-1000 கி.கி வரை பொருட்கள் ஏற்றிச் செல்லக்கூடியதாய் இருத்தல் வேண்டும் (ஏற்றிச் செல்லக்கூடிய நிறைக்கான சான்றிதழை முன்வைக்க வேண்டும்.)
5. அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பு ஆடை (Life Jacket) மற்றும் நீர்புகா மேற்சட்டை (Rain Coat) வழங்க வேண்டும்.
6. படகில் தங்குமிட பகுதியின் மேற்புறம் வெயில் / கடல் நீரிலிருந்து (Sea Spray) பாதுகாப்பு வேலியை கொண்டிருத்தல் வேண்டும்.
7. தெரிவு செய்யப்படும் படகு மற்றும் படகு ஓட்டுனருக்கு இலங்கை கடற்படையில் அனுமதி பெறக்கூடியதாக இருத்தல்.
8. படகு ஓட்டுனர் செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
9. பயணிகள் மற்றும் ஊழியர் குழாம் மற்றும் பொருட்களுக்கு செல்லுபடியாகும் பயணிகள் காப்புறுதி சான்றிதழை கொண்டிருத்தல்.
10. படகு ஓட்டுனர் மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் பொலிஸ் நன்னடத்தை சான்றிதழை கொண்டிருத்தல். வேண்டும்.
11. நிலக்கரி இறக்கப்படும் காலப்பகுதியில் எந்தவொரு நாளிலும் பகல், இரவு சேவையை வழங்கக்கூடியதாக இருத்தல் மற்றும் தேவைப்படும் போது கப்பலுக்கு அருகில் 4 படகுகளை நிறுத்தி வைக்கக்கூடியதாக இருத்தல்.
12. படகுகளுக்கு உரித்தான சர்வதேச தரப்படுத்தல் சங்க மாநாட்டில் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடற்பயணத்திற்கான சான்றிதழ் அல்லது தரப்படுத்தல் சங்கத்தின் சான்றிதழ் முன்வைக்கவேண்டும்.
13. சாதாரண கடல் தன்மையின் கீழ் மணித்தியாலத்திற்கு 12 மைல்கள் தூரத்திற்கு குறையாத வேகத்தில் பாதுகாப்பாக செலுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
14. VHF, Compass, Flash Light மற்றும் SOLAS இனால் பரிந்துரைக்கப்பட்ட முதலுதவி வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
15. லக்விஜ அணல்மின் நிலையத்தின் பரப்பில் 4-5 மீற்றர் அளவிற்கு ஏற்ற படகாக இருத்தல் வேண்டும்.

வழங்கப்படும் படகுகளில் பயணிகள் மற்றும் பொருட்களை பாதுகாப்பாக ஏற்றக்கூடிய லக்விஜய அணுமின் நிலையம் அல்லது நுரைச்சோலையில் காணப்படும் கடற்படை முகாம்களுக்கு அருகில் செய்யக்கூடியதாக இருத்தல், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது முற்றுமுழுவதும் மனுதாரர்களையே சாரும்.

ஆர்வம் காட்டும் மனுதார்கள் மேலதிக விபரங்களை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் கப்பல்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் குறித்த திணைக்களத்தில் **saman@cscl.lk** அல்லது **077 343 6715** எனும் இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் மனு ஆவணங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தினமும் **மு.ப.9.00 முதல் பி.ப.03.00** மணிவரை வேலைநாட்களில் காரியாலய நேரத்தில் பரிசீலனை செய்ய முடியும்.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தினமும் அலுவலக நேரத்தில் **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.03.00 மணி** வரையான காலப்பகுதியினுள் **ரூ.10,000/- (+18%) (வட்வரி உள்ளடங்களான) மீளச்செலுத்தப்படாத** கட்டணத்தை செலுத்தி இந்த கூட்டுத்தாபனத்தில் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய முறையில் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பங்கள் தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"படகுச் சேவைகளுக்கான விலைமனுகோரல் 2024/25"** எனக்குறிப்பிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் (குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன் கிடைக்கப்பெறுமாறு) அல்லது அந்த விலாசத்தில் கூட்டுத்தாபன காரியாலயத்தில் அதற்காக இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் **2024.10.17** ஆம் திகதிக்கு முன் இட முடியும்.

**2024.10.17 ஆம் திகதி 1400 மணிக்கு (இலங்கை நேரப்படி)** மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இந்த மனுக்களை எந்த ஒரு நேரத்திலும் நிராகரிக்கும் உரிமை மற்றும் நீட்டிக்கும் உரிமை வழங்கற்குழுவின் வசம் இருப்பதுடன் நிராகரிப்பதற்கான காரணத்தை வழங்கற்குழு முன்வைக்கத்தேவையில்லை. நேரம் தாழ்த்திக்கிடைக்கும் மனுக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

இவ்விலைமனுக்கோரலின் அடிப்படையில் **2024 ஒக்டோபர் மாதம் முதல் 2025 ஜுன் மாதம்** வரை செல்லுபடியாகும் **(நிலக்கரி இறக்கும் காலம் + / - 02 கிழமை).** அதேபோல் மீண்டும் இரு முறை தெரிவு செய்யும் நிறுவனங்களுக்காக ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பது (ஒப்பந்தத்தின் அடிப்படையில்) வரையருக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் விருப்பத்தின் படியாகும்.

**தலைவர்**
**கூட்டுறவு வழங்கல் குழு**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்,**
**இல - 27, MICH கட்டிடம்,**
**சேர் ராஸீக் பரீட் மாவத்தை (பிரிஸ்டல் வீதி) கொழும்பு 00100.**
**தொடர்புகளுக்கு - (011) 2328772/3, (011) 2423214, (011) 2497800**

SELACINE

# கேள்விக்கான அழைப்பு விடுத்தல்

## (இலங்கை அரசின் மானிய செயற்றிட்டம்)

## விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை.

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் நிர்மாணத்திற்காக கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள இக்டாட் - ICTAD, சீடா - CIDA பதிவுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏதேனும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர், பதில் பிரதிநிதி, உப பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்படுபவராக சமர்ப்பிக்கும் நபர் ஒருவர் சம்பந்தமாக வழிகாட்டல் கோவை 8(1), (மேலதிக - 13) இன் பிரகாரம் 1987 இல - 03 எனும் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்திருப்பதுடன், மேற்படி பதிவை உறுதி செய்வதற்கு பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2024.09.26 முதல் 2024.10.15 பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் இத் திணைக்களத்தின் செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தில் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாக பரீட்சித்து பார்த்து அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2024.10.16 மு.ப. 10.30 இற்கு முன்பு இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றே மு.ப. 10.35 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேற்படி வேலை பற்றிய மேலதிக தேவையான தகவல்கள் இருப்பின் விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு வருகைதந்து அல்லது கீழ்க்காணும் தொ.பே.இலக்கம் மூலம் விசாரித்து அறியலாம்.

கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர், திறக்கப்படும் திகதி மற்றும் நேரத்தை குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

கீழ்க்காணும் வேலைக்காக பி.வீ.அ. 13ம் செயற்றிட்ட வரைபின் 8.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு குறித்தவாறான விண்ணப்பதாரிகள் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்திருப்பதுடன், அங்கு பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலையின் தன்மை | பதிவு செய்யப்பட்ட வகுதி ICTAD/ CIDA (கட்டிட நிர்மாணம்) | கேள்விப் பிணைமுறி | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | காசாக செலுத்துவதாயின் (ரூ) | வங்கிப் பிணையொன்றை சமர்ப்பிப்பதாயின் (ரூ) |
| அநுராதபுரம் விவசாயக் கல்லூரியின் விடுதியைப் புதுப்பித்தல் (கட்டம் I) ரூ. 22,330,648.00) கேள்வி இல. செ/பி/06/06/2024-139) | C6,C5 | 8,000.00 | 223,300.00 | 446,600.00 |
| பாலமுனை விவசாயக் கல்லூரியின் மகளிர் விடுதிக் கட்டிட நிர்மாணம் (ரூ. 16,858,151.76) (கேள்வி இல. செ/ப/06/06/2024-142) | C6,C5 | 5,500.00 | 168,550.00 | 337,100.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**

**தொ.பே.இல.: 081 - 2388124/ 081 - 2389127**
**பெக்ஸ்.: 081 - 2387403**

# அறிவித்தல்

**2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ், கீழ்க்காணும் கம்பனி 2024 செப்டெம்பர் 20ம் திகதி கூட்டிணைக்கப் படுவதாக இத்தால் அறிவித்தல் விடுவிக்கப்படுகின்றது**

கம்பனியின் பெயர் : **விலா வெல்துய்யன் (பிரைவட்) லிமிட்டட்**

கம்பனி பதிவு இல : **PV00310237**

பதிவு அலுவலக முகவரி : **22/8F, பீல்ட்வீவ் ரோட், நலகஸ்தெனிய, ஹிக்கடுவ**

சபையின் கட்டளை பிரகாரம்.

**மின்னேரிபிட்டியகே தொன் சார்கா மனிஷா கருணாரத்ன**
**கம்பனி செயலாளர்**
**97/A, கடவத்த வீதி, களுபோவில**

www.adz.lk
it's what you want

# இலங்கை வங்கி

## மத்திய மாகாணத்தின் கண்டி நகரத்தில் புதிய கிளையொன்றை அமைப்பதற்கு வாடகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது.

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடமானது பிரதான வீதியிலிருந்து குறைந்தபட்சம் 30 அடி அகலத்திற்கு மேற்பட்ட முகப்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு நகர மத்தியில் இருந்து 2.5 கிலோ மீற்றருக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 1300 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டடமாகவிருத்தல் வேண்டும்.
- தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- போதுமான அளவு நீர் வழங்கல், மேலதிக நீருக்கான தாங்கி, 60 அம்பியர் மின்சாரம், தொலைபேசி வசதிகள், துப்புரவேற்பாட்டு வசதிகள், அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாயில் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் இருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்துடன் மாதாந்த வாடகை உட்பட இயைபுடைய விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் அனுப்பவும்.

**உதவிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்),**
**இலங்கை வங்கி, மத்திய மாகாண அலுவலகம்,**
**சீ பேங்க் கட்டடம், கண்டி.**
**தொலைபேசி இல. 081-2201444**

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

**N-90**

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் கீழ்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து / வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| No | Item | Qty | Bid Reference No | Bid Security (Rs.) |
|---|---|---|---|---|
| Item 01 | Strapping Rolls forfully Automatic heavy duty Strapping Machines (Thickness - 0.7mm, Width - 9mm Length - 2000 m ) | 700 Rolls | SCP02/NCB08/ S.T.Roll/2024-33 | 80,000.00 |
| Item 02 | CTP Polymer Plate DWF95 NM (635mm x 762mm-0.95mm) | 200 Sheets | SCP02/NCB07/DWF95 NM/2024-32 | 100,000.00 |

2024.09.26 ஆம் திகதி முதல் 2024.10.16 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை, மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொரு உருப்படிகளுக்கும் வெவ்வேறாக ரூபா 3000.00 வீதம் மீளளிக்கப்படாத மனுகட்டணம் செலுத்தி, கீழே தரப்பட்டுள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உள்நாட்டு வழங்கல் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்

**விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் - 2024.10.18 ஆந் திகதி**
**பி. ப. 2.00 மணி**

மேலதிக விபரங்களுக்கு கடமை நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.15 மணி வரை **011-2694898** என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது **www.documents.gov.lk** இணையதளத்தினூடாக தொடர்புகொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08**

**2024.09.26**
**தொலைபேசி : 011 - 2694898**
**இணையதளம் : www.documents.gov.lk**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/PT/6615(MAR) | Spares for Wartsila 9L20 Main Engines Onboard MT Barana II and MT Vijayabahu | 120,000.00 | 3,500.00 | 07-11-2024 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/24/PT/02/006 | 01 No. Pipe Bending Machine (Electric) | 100,000.00 | 3,500.00 | 18-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/01/017 | License, Maintenance and Support Renewal of VMWARE Infrastructure | 100,000.00 | 3,500.00 | 18-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/04/026 | User Licenses of End Point Security for Client PC' S | 50,000.00 | 1,000.00 | 18-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/11/053 | Zinc Andoes Direct Weldable Ship Quality 10KG | 33,400.00 | 1,000.00 | 21-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/16/059 | Spares for the Terberg Yard Tractors | 19,000.00 | 1,000.00 | 21-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/10/60 | 50 Nos of Spherical Roller Bearings for ZPMC, 41 Ton STS Cranes | 25,000.00 | 1,000.00 | 21-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/04/066 | Spares for Caterpillar C -15 Engine of RTG ( TC – 64 ) Cranes | 70,000.00 | 1,000.00 | 22-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/18/055 | Spare Parts for Benz Engine | 35,000.00 | 1,000.00 | 22-10-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/10/062 | Spare Parts for UD Nissan Prime Movers | 12,500.00 | 1,000.00 | 23-10-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 செப்டெம்பர் 27ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் எண்: 2381652, 2470443

# சுகாதார சேவைத் திணைக்களம்

## மாவட்ட பொது வைத்தியசாலை மாத்தறை

### ஆய்வுகூட சாதனங்களுக்கான மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்கான விலைமனு அழைத்தல்

பின்வரும் உபகரணங்களுக்கான தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| அம்ச இலக்கம் | அம்சங்களின் பெயர்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Fully Automated Tissue Processor | 01 No. |
| 02 | Slide Steiner | 01 No. |
| 03 | Orthopedic Drill System | 02 Nos. |

1. விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் அம்சங்களின் விபரமான பட்டியல் மற்றும் விபரக் குறிப்புக்களை பெற்றுக் கொள்ளலாம். பாவனையாளர் பட்டியல், விபரமான கையேடுகள், சேவை கைநூல், விற்பனைக்கு பிந்திய சேவை வசதி மற்றும் கையிருப்பு நிலை ஆகியவை விலைமனுக்கோரல் ஆவணத்துடன் வழங்கப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் பின்வருவனவற்றைக் கொண்டிருப்பதுடன் ஆவணச் சான்றை விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   (1) மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்களை விற்பனை செய்வதற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபாரப் பதிவு.
   (2) அவர் (விலைமனுதாரர்) உற்பத்தியாளர் இல்லாவிடின், அம்சங்களை விற்பனை செய்வதற்கான எழுத்து மூலமான அதிகாரத்தை அவர் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கோரல் ஆவணங்களை 2024.09.26 ஆம் திகதியிலிருந்து 2024.10.15 ஆம் திகதியன்று வரையும் வேலை நேரங்களில் ஒவ்வொரு அம்சத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை செலுத்திய பின்னர் மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலை கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
4. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு 2024.10.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலை, பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தறை**

**தொலைபேசி : 0412222261/0412227820**
**தொலைநகல் : 0412222444**
**மின்னஞ்சல் : dghmatara@yahoo.com**

# பெறுகை அறிவித்தல்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## இலங்கை மதுவரித் திணைக்களம்

## கேள்விமனுக்கோரல் - (IFB)

### இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு காக்கி சீருடைத் துணி, சப்பாத்து, கால்மேசு (Socks) வழங்குவதற்கான பெறுகை

1 **இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சார்பில், திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால்** தேசிய போட்டிக் கேள்விமனு நடைமுறையைப் பயன்படுத்தி இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு காக்கி சீருடைத் துணி, சப்பாத்து, கால்மேசு, வழங்குவதற்கான பெறுகை அறிவித்தலுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி | விடயம் | தேவையான அளவு (மீற்றர்/சோடி) |
|---|---|---|
| A | காக்கி சீருடைத் துணி | 6,111 மீ |
| B | ஆண்களுக்கான சப்பாத்து - அலுவலர்கள் | 336 |
| | பெண்களுக்கான சப்பாத்து - அலுவலர்கள் | 02 |
| | ஆண்களுக்கான சப்பாத்து - ஏனைய பதவித்தரங்கள் | 709 |
| | பெண்களுக்கான சப்பாத்து - ஏனைய பதவித்தரங்கள் | 40 |
| C | கால்மேசு (Socks) | 3,198 |

தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் பற்றிய விரிவான விளக்கம் கேள்விமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

2. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான கேள்வி மனுதாரர்கள் **இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்கீட்டுப் பிரிவின் பிரதம கணக்காளரிடமிருந்து** மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், கேள்விமனுக்கோரல் ஆவணங்களை **2024.09.26 ஆம் திகதி** முதல் வார நாட்களில் (தேசிய விடுமுறை நாட்கள் தவிர்ந்த) அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை) பார்வையிடலாம். **தொலைபேசி இலக்கம் : 011-2045073**

3. ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள், **வியாபாரப் பதிவுச்சான்றிதமுடன்** மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல வேண்டுகோளொன்றை **2024.10.15 பிற்பகல் 3.00** மணி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்து **இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்கீட்டுப் பிரிவிற்கு** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா ஐயாயிரத்தினை (ரூ.5000/-)** இனைச் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. கேள்விமனுக்களை **திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு** பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு **2024.10.16** ஆம் திகதி **மு.ப.10.00** மணி அல்லது அதற்கு முன்னர் இத்திணைக்களத்தை வந்தடையக் கூடிய விதத்தில் அனுப்ப வேண்டும். அல்லது இல 353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள மதுவரி திணைக்களத்தின் நான்காம் மாடியிலுள்ள கணக்குகள் பிரிவில் பிரதம கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுக்கள் சேகரிக்கும் பெட்டியில் **2024.10.16 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இட வேண்டும்.

தாமதமான கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். வேறு முறைகளில் அல்லது இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும் கேள்விமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. **மனுதாரர்கள் அனைத்து தொகுதியிலும் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியில் விண்ணப்பிக்க முடியும், இருப்பினும் மனுதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிக்கு விண்ணப்பிப்பாராக இருப்பின், ஒவ்வொரு தொகுதியின் தொகையிற்குமான மொத்த மனுப்பாதுகாப்புத் தொகையாக ஒரு மனுப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.** அனைத்து கேள்விமனுக்களும், கேள்விமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனையற்ற வங்கி உத்தரவாத படிவத்தின் வடிவிலான பத்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான **"மனுப்பாதுகாப்புடன்"** அனுப்பப்பட வேண்டும். மனுப்பாதுகாப்பானது **2024.10.16** ஆம் திகதியிலிருந்து **2025.01.28** வரை செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.

6.

| தொகுதி | விடயம் | மனுப்பாதுகாப்பு தொகை (ரூ) |
|---|---|---|
| A | காக்கி சீருடைத் துணி | 45,000.00 |
| B | ஆண்களுக்கான சப்பாத்து - அலுவலர்கள் | |
| | பெண்களுக்கான சப்பாத்து - அலுவலர்கள் | |
| | ஆண்களுக்கான சப்பாத்து - ஏனைய பதவித்தரங்கள் | |
| | பெண்களுக்கான சப்பாத்து - ஏனைய பதவித்தரங்கள் | 120,000.00 |
| C | கால்மேசு (Socks) | 15,000.00 |

7. கேள்விமனுக்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியிலிருந்து **77 நாட்களிற்கு** செல்லுபடியானதாக வேண்டும்.**(2024.12.31 வரை)**

8. முறையாகப் பொதி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட மாதிரிகளை மனு ஆவணங்களுடன் கேள்விமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை மதுவரித் திணைக்களம், இல 353, கோட்டை வீதி, இராஜகிரிய** என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு, மாதிரிகளை பரிசோதிப்பதற்கான கட்டணங்களை மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு பணமாக செலுத்த வேண்டும் என்பதுடன் பற்றுச்சீட்டின் பிரதி கேள்விமனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வேறு எந்த கட்டண முறைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

பெறுகை நிபந்தனைகளுக்கு இணங்காத நிராகரிக்கப்படும் மாதிரிகள், தர பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்பதுடன் பரிசோதனை கட்டணங்கள் மீளளிக்கப்படும். பெறுகை நிபந்தனைகளுக்கு இணங்குகின்ற மாதிரிகள், தரப் பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படுவதுடன் அவற்றுக்கான கட்டணங்கள் வைப்பிலிருந்து கழிக்கப்படும். மீதி ஏதேனும் இருப்பின், மீள வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநருக்கான இறுதி ஒப்பந்த கட்டணத்தை செலுத்த முன்னர் மாதிரிகளுக்கான தர பரிசோதனை ஒன்று நடத்தப்படும் என்பதுடன் மாதிரிகளின் பரிசோதனைக்கான செலவு, ஒப்பந்த கட்டணத்திலிருந்து கழிக்கப்படும்.

| தொ-குதி | விடயம் | மாதிரிக்காக சமர்ப்பிக்கப்படவேண்டிய அலகுகளின் எண்ணிக்கை (மீற்றர்/சோடிகள்) | மாதிரிகளை பரிசோதிப்பதற்கான கட்டணங்கள் + SSCL +18% VAT (ரூ). |
|---|---|---|---|
| A | காக்கி சீருடைத் துணி | 02 (M) | 43,355.70 |
| B | ஆண்களுக்கான சப்பாத்து சோடி - அலுவலர்கள் | 01 | No |
| | பெண்களுக்கான சப்பாத்து சோடி - அலுவலர்கள் | 01 | No |
| | ஆண்களுக்கான சப்பாத்து சோடி - ஏனைய பதவித்தரங்கள் | 01 | No |
| | பெண்களுக்கான சப்பாத்து சோடி - ஏனைய பதவித்தரங்கள் | 01 | No |
| C | கால்மேசு (Socks) சோடி | 02 | No |

9. கேள்விமனுக்கள், அவற்றை சமர்ப்பிப்பதற்கான காலம் நிறைவடைந்தவுடனேயே மேலே பந்தி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரில் கலந்துகொள்ள விரும்பும் கேள்விமனுதாரர்கள் மற்றும்/அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. கேள்விமனுக்களை தயாரிப்பது அல்லது வழங்குவது தொடர்பாக மனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்கும் மதுவரித் திணைக்களம் பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை மதுவரித் திணைக்களம், இல 353,**
**கோட்டை வீதி, இராஜகிரிய.**
**2024.09.26**

SELACINE

Repeat Your Ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

சுகாதார சேவைகள் திணைக்களம் - ஊவா மாகாணம்

# பெறுகை அறிவித்தல்

## நாய்களுக்கு கருத்தடை செய்தல் – 2024

ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள் இரண்டையும் உள்ளடக்கும் விதத்தில் நாய்களுக்கு கருத்தடை செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | மாவட்டம் | கருத்தடை செய்ய வேண்டிய நாய்களின் எண்ணிக்கை | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக | மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | மொனராகலை மாவட்டம் | 1700 | 80,000.00 | ரூபா 4,000.00 |
| 02 | பதுளை மாவட்டம் | 2000 | | |

மேற்கூறப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு கேள்வி மாதிரிப் படிவக் கட்டணத்தை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் கேள்வி மாதிரிப் படிவங்கள் ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். 2024-09-26ஆம் திகதி தொடக்கம் 2024-10-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பி.ப. 3.30 வரை கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன், வாரத்தில் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை மட்டுமே பணக் கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பிணைக் கட்டணத்திற்கு வங்கிப் பிணையமொன்று சமர்ப்பிப்பதாயின் மேலே தரப்பட்டுள்ள கேள்விப் பிணைக் கட்டணத்தைப் போன்று இரண்டு மடங்காக இருத்தல் வேண்டும்.

- ➢ கால்நடை வைத்தியர்களின் சங்கத்தில் பதிவு செய்துள்ள மற்றும் இரண்டு வருட கால சேவை அனுபவம் உள்ள நிறுவனம் அல்லது தனி நபர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ➢ அனைத்து கொடுப்பனவுகளும் ரொக்கப் பணமாக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். 02 பிரதிகளாக வழங்கப்படும் கேள்வி மாதிரிப் படிவங்களை உரிய முறையில் ஒரே விதமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். கேள்வி மாதிரிப் படிவங்கள் இரண்டையும் அதாவது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரை இட்டு அந்த இரண்டு உறைகளையும் தனி உறையொன்றில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாய்களுக்கு கருத்தடை செய்தல் - 2024" எனக் குறிப்பிட்டு அதற்குக் கீழ் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படுதல் வேண்டும்.
- ➢ முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் 2024-10-18ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அல்லாவிடில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், இலக்கம் 301, ஆர் எச் குணவர்தன மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முழுமையற்ற விண்ணப்பப் படிவம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
- ➢ கிடைக்கப் பெற்றுள்ள அனைத்து கேள்விகளும் 2024-10-18ஆம் திகதி கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததும் உடனடியாக ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் முன்னிலையில் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விகளைச் சமர்ப்பித்த கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். கேள்விதாரருக்கு கலந்துகொள்ள முடியாவிட்டால் எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ளலாம் என்பதுடன் அவரினால் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- ➢ வாரத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கேள்வி மாதிரிப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**3 ஆம் மாடி, இல. 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை,**
**பதுளை.**
**தொலைபேசி இலக்கம்: 055 - 2231981**
**தொலைநகல் இலக்கம்: 055-2223098**

# தலவாக்கலை லிந்துலை நகர சபை

## தீபாவளி பண்டிகை – 2024

## நிலத்துண்டுகளை வழங்குவதற்கான கேள்விமனுகோரல்

தீபாவளி பண்டிகை காலத்தில் தற்காலிக வியாபாரத்தை மேற்கொள்வதற்கான நிலத்துண்டுகளை பெற்றுக்கொடுத்தல்.

- o 2024 ம் வருடத்தின் ஒக்டோபர் மாதம் 31 ம் திகதி கொண்டாடப்படவுள்ள தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 2024.10.25 ம் திகதியில் இருந்து 2024.11.02 ம் திகதி வரை தற்காலிக வியாபாரங்களை மேற்கொள்வதற்கான நிலத்துண்டுகள் வழங்கப்படவுள்ளது.
- o நிலத்துண்டுகளின் குறைந்த கேள்வித்தொகை கீழ்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 தொடக்கம் 26 வரை 10 அடி அகலம் கொண்ட 26 நிலத்துண்டுகள் ஒன்று ரூ.40000.00 வீதம் | 27 தொடக்கம் 56 வரை 10 அடி அகலம் கொண்ட 30 நிலத்துண்டுகள் ஒன்று ரூ.35000.00 வீதம் | 57 தொடக்கம் 86 வரை 10 அடி அகலம் கொண்ட 30 நிலத்துண்டுகள் ஒன்று ரூ.30000.00 வீதம் | 87 தொடக்கம் 115 வரை 10 அடி அகலம் கொண்ட 29 நிலத்துண்டுகள் ஒன்று ரூ.22500.00 வீதம் | 116 தொடக்கம் 158 வரை 10 அடி அகலம் கொண்ட 43 நிலத்துண்டுகள் ஒன்று ரூ.15500.00 வீதம் |

**நிபந்தனைகள்.**

1. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரஜையொருவருக்கு மாத்திரமே இக் கேள்விமனுவிற்காக விண்ணப்பிக்க முடியும்.
2. தாங்களினால் விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள நிலத்துண்டினை பௌதீக ரீதியாக பரிசீலித்து விண்ணப்பிக்க வேண்டும். கேள்விமனுக்கள் திறக்கப்பட்டு வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த நிலத்துண்டு அல்லது நிலத்துண்டிற்கான தொகை மீளளிக்கப்படுவதில்லை. அத்துடன் கோரப்படும் நிலத்துண்டானது வேறு நிலத்துண்டுகளுடன் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படுவதில்லை.
3. கேள்விமனு விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படுவது 2024.09.26ம் திகதியில் இருந்து 2024.10.16 ம் திகதி பி.ப. 3.00 மணி வரை மாத்திரமே.
4. கேள்விமனு விண்ணப்பப்படிவத்தை இடும் கடித உறையின் இடது பக்க மேல் முனையில் "(நிலத்துண்டு இலக்கம் .............. 2024 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தற்காலிக வியாபாரத்திற்காக நிலத்துண்டுக்களை பெற்றுக்கொள்ளல்") எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
5. கேள்விமனு விண்ணப்பப்படிவத்திலும் தாங்கள் கோரும் நிலத்துண்டின் இலக்கத்தை அல்லது நிலத்துண்டுகளின் இலக்கங்களை குறிப்பிடுதல் வேண்டும். மேலும் ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சம் 05 நிலத்துண்டுகளை மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
6. கேள்விமனு விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் நபர்களினால் அதற்குரிய கேள்விமனு விண்ணப்பப்படிவ கட்டணமான 1000.00 ரூபாவை இலங்கை வங்கியின் தலவாக்கலை கிளையில் 74970568 இலக்க கணக்கில் வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டின் தெளிவான புகைப்படமொன்றை 0758316066 அல்லது 0758500844 இலக்க வட்ஸ்அப் (Whatsapp) இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் விண்ணப்பிக்க முடியும். தாங்களின் வைப்புத்தொகையின் துல்லியத்தை உறுதிசெய்துகொண்டதன் பின்னர் உங்களுக்கு வட்ஸ்அப் (Whatsapp) ஊடாக கேள்விமனு விண்ணப்பப்பத்திரத்தினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. தெளிவாக மற்றும் சரியாக பூர்த்திசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கேள்விமனு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2024.10.18 ம் திகதி மு.ப. 10.00 மணி வரையாகும். குறித்த கேள்விமனு விண்ணப்பப்பத்திரங்களை சரியாக பூர்த்தி செய்து பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும். நேரடியாக கையளிப்பதெனில் சபையில் உள்ள அதற்கு உரிய பதிவேட்டில் தாங்களின் பெயர், விலாசம், நேரம் மற்றும் கையொப்பம் என்பனவற்றை இட்டு முத்திரையிடப்பட்ட கேள்விமனு பெட்டியில் இடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அல்லாது கையளிக்கப்படும் கேள்விமனு விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பாக தலவாக்கலை லிந்துலை நகர சபை எவ்வித பொறுப்பினையும் ஏற்பதில்லை.
8. மேலும் கேள்விமனு விண்ணப்பப்பத்திரங்களை "செயலாளர், தலவாக்கலை லிந்துலை நகர சபை, தலவாக்கலை" எனும் முகவரிக்கு மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.
9. கேள்விமனு விண்ணப்பத்துடன் கீழ்காட்டப்பட்டவற்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
   * தேசிய அடையாள அட்டையின் பிரதி
   * விண்ணப்பப்பத்திர கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு (மூலப்பிரதியை மாத்திரம் இணைத்து அனுப்புதல் வேண்டும்)
10. கேள்விமனு விண்ணப்பப்பத்திரங்கள் 2024.10.18 ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு தலவாக்கலை லிந்துலை நகர சபை காரியாலயத்தில் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்திற்கு தாங்கள் பங்கேற்க முடியும். அதன்போது தமது ஆள் அடையாளத்தை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும். மேலும் அச் சந்தர்ப்பத்திற்கு தாங்கள் பங்கேற்க முடியவில்லை எனில் உங்களது கையொப்பத்துடனான கடிதமொன்றுடன் பிரிதிநிதியொருவரை பங்கேற்க செய்ய முடியும்.
11. குறைந்த கேள்வித்தொகையினையும் விட குறைவான பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனு விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
12. கேள்விமனுக்கள் திறக்கப்பட்டதன் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட கேள்விமனுதாரர்கள் கேள்விமனுக்கள் திறக்கப்பட்ட 2024.10.18ம் திகதியே பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கேள்விமனுவிற்கு உரிய முழுத்தொகையையும் செலுத்துதல் வேண்டும். அத்துடன் வியாபார கூடமொன்றிற்கான கேள்விதொகைக்கு மேலதிகமாக ஒவ்வொரு வியாபார கூடத்திற்குமான வியாபார அனுமதி பத்திர கட்டணமான 1000.00 ரூபாவினை அன்றைய தினமே செலுத்தி முடித்தல் வேண்டும்.
13. உரிய முறையில் கொடுப்பனவுகளை செலுத்திய கேள்விமனுதாரர்களுக்கு 2024.10.22 ம் திகதி கேள்விமனுக்கள் வழங்கப்படுவதுடன், 2024.10.25 ம் திகதியில் இருந்து 2024.11.02 ம் திகதி வரை மாத்திரமே வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும்.
14. வியாபாரத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அகற்றப்படும் கழிவுகளை (உக்கும்/ உக்காத) என வகைப்பிரித்து நகர சபையின் கழிவகற்றல் வாகனத்திற்கு கையளித்தல் வேண்டும்.
15. மின்சார வசதிகள் வழங்கலானது பிராந்திய கேள்விமனுதாரர் ஒருவரின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால், அவரின் நிபந்தனைக்கு ஏற்ப மின் இணைப்பினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
16. வியாபார வளாகத்தினுள் பட்டாசு, விலங்குகள், இறைச்சி வகைகள், மதுபானம் மற்றும் சட்டவிரோத வியாபாரங்களை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
17. வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் தலவாக்கலை லிந்துலை நகர சபையின் அதிகாரிகள் மற்றும் வணிக நடவடிக்கைகள் தொடர்பான ஏனைய அதிகாரிகளுக்கு தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தை பரிசீலிப்பதற்கு இடமளித்தல் வேண்டும்.
18. மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை மீறப்பட்டால் குறித்த இடத்தை கையகப்படுத்தும் அதிகாரம் நகர சபைக்கு உண்டு என்பதுடன், கேள்விமனு குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

**செயலாளர்,**
**தலவாக்கலை லிந்துலை நகர சபை.**

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

## போதனா வைத்தியசாலை - அநுராதபுரம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பின்வரும் கட்டிட வேலைகளைச் செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024-09-26ஆம் திகதி முதல் 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| செயற்றிட்ட இலக்கம் | செயற்றிட்டம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | விலைமனுப் பிணை முறி | பொறியியல் மதிப்பீடு (ரூபா மில்லியன்) | CIDA மற்றும் NCPC பதிவு |
|---|---|---|---|---|---|
| THA/AA/WD 21/2024/22 | RENOVATION OF ROOF, CEILING AND ELECTRICAL WORKS AT WARD 21 (PART 01) | 3,000.00 | 220,000.00 | 21.9 | C5 or C6 |
| THA/AA/ A&E/2024/23 | CONSTRUCTION OF MANIFOLD ROOM FOR ACCIDENT & EMERGENCY TREATMENT UNIT RESUSCITATION AREA | 2,500.00 | 67,000.00 | 6.6 | C6 or C7 |
| THA/AA/ FOQL/2024/33 | CONSTRUCTION OF MINOR STAFF REST ROOM AT FOOD QUALITY LABORATORY | 1,500.00 | 9,300.00 | 0.92 | C8 or C9 |

01. சமர்ப்பிக்கப்படும் விலைமனுப் பிணை 2024-10-10ஆம் திகதி முதல் 2025-02-03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். அவ்வாறே விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியாகவிருத்தல் கட்டாயமாகும்.
02. அநுராதபுரம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. 4/2016(II) அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 3.2 இன் பிரகாரம் வடமத்திய மாகாணத்தில் வதியும் ஒப்பந்தக்காரர்களுக்கிடையில் சித்திகரமான விலைமனுதாரர்களுக்கு 05% முன்னுரிமை வழங்கப்படும்.
04. 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டமைக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாவணங்கள் சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
05. கட்டிட திருத்த வேலைகளுக்கான மேலதிக விபரங்களை 025-2222261-105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
06. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் தலைமை அலுவலகத்தில் 2024-10-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த கேள்விக்குரித்தான ஆவணங்களை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. பெறுகை நிபந்தனைகளுக்கமைவாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழு, அநுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.
08. 2023-10-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இந்த பெறுகை தொடர்பில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**அநுராதபுரம்.**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

வழங்கல் பிரிவு – மத்திய சமையலறைக்கு

## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்களை வழங்கும் பொருட்டு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01. | அரிசி (முழுமையாக கல் மற்றும் மணல் நீக்கப்பட்டவை) |
| 02. | கருவாடு வகைகள் |
| 03. | மரக்கறிகள் மற்றும் கிழங்கு வகைகள், கஜு விதைகள் மற்றும் கஜு துண்டுகள் |
| 04. | தேங்காய்கள், தேங்காய் பால்/கிறீம் |
| 05. | முட்டைகள் |
| 06. | பலசரக்குப் பொருட்கள் மற்றும் தானியங்கள் |
| 07. | வாழைப்பழம் |
| 08. | வெள்ளைச் சீனி |
| 09. | தேயிலை/கோப்பித் தூள் |
| 10. | சூழலுக்கிசைவான உணவு சுற்றும் பொலித்தீன் தாள்கள் (17"x 17") மற்றும் (குறோசறி பைகள் - 7" x 10" மற்றும் 9" x 12") |
| 11. | தேங்காய் எண்ணெய் |
| 12. | கோழியிறைச்சி |
| 13. | பிஸ்கட்கள் |
| 14. | பால்மா / கட்டிப்பால் |
| 15. | ஜேம் / மாஜரின் |
| 16. | எரி வாயு (L.P. Gas) |
| 17 | உணவு பெட்டிகள் (காட்போட்) / உணவு பொதிசெய்யும் காகிதங்கள் |
| 18 | மீன் |
| 19 | குடி நீர் (போத்தலில் அடைக்கப்பட்டவை) |
| 20 | இடியப்பம், பிட்டு போன்றன |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்படி 01 முதல் 20 வரையான பொருட்களுக்காக பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருளுக்கும் ரூபா 1000.00 மற்றும் வெட் வரி என்பவற்றைச் செலுத்தியதன் பின் 2024-11-08ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தையில் அமைந்துள்ள வழங்கல் பிரிவு, பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. வழங்கல்களுக்காக பொதுவாக பதிவு செய்துகொண்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் உரிமையை துறைமுக அதிகாரசபை தன்னகத்தே கொண்டுள்ளது.
04. முறையாக விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள் மற்றும் துறைமுக அதிகாரசபையினால் வழங்கப்படும் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளின் பிரகாரம் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பெயர் பட்டியலிலிருந்து அகற்றப்படும்.
05. சகல விண்ணப்பப் படிவங்களும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2025ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு, பிரதான முகாமையாளர் (வழங்கல்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகாரசபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு 2024-11-18ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். தேவைப்படும் ஆதார ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் மேற்படி முகவரியில் உள்ள பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்கு இந்த விண்ணப்பங்களை நேரடியாக ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
06. மேலதிக விபரங்களை **2323102, 2432866, 2482259, 2320250, 2483553, 2482499, 2482259, 2328342** எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு 01.**

**இலங்கை துறைமுக அதிகார சபை**

## 2025ஆம் வருடத்தின் பொருட்டு உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01 | பெட்டறி, ஈயம், அமிலம் மற்றும் அவ்வாறான பொருட்கள் |
| 02. | இயந்திராதிகளுக்குத் தேவையான சகல பெயாரிங் வகைகள் |
| 03. | கட்டிடப் பொருட்கள் (செங்கல், கல், மணல், இரும்பு, PVC குழாய்கள் மற்றும் உருப்படிகள், கூரைத் தகடுகள் மற்றும் சீலிங் சீட்டுகள்), சீமெந்து, முன்கலவை கொங்கிறீட் (Ready mixed Concrete ) |
| 04. | இரசாயனப் பொருட்கள், கைத்தொழில், விவசாய இரசாயனங்கள், களைக் கொல்லிகள், அனைத்து வகையான சவர்க்காரங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமிநாசினி வகைகள் |
| 05 | சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| 06 | கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி அச்சுப் பொறிகள், மென்பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், டோனர் வகைகள், UPS |
| 07 | மின் உபகரணங்கள் (சகல வகையான வீட்டு மின் உபகரணங்கள்) மற்றும் கட்புல செவிப்புல உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 08 | மின்சார கேபள்கள் மற்றும் தொலைத்தொடர்பு கேபள்கள், மின்சார கட்டுப்பாட்டு முறைமை மற்றும் துணைப்பாகங்கள், மின் குமிழ்கள் மற்றும் துணைப்பாகங்கள், வாகன ஹோர்ன் |
| 09 | VHF, கையடக்கத் தொலைபேசிகள், நிலையான தொலைபேசிகள் மற்றும் துணைப்பாகங்களுக்கான தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் உட்பட இலத்திரனியல் உபகரணங்கள். |
| 10 | பொறியியலாளர் கருவிகள் மற்றும் உபகரணங்கள், மின்சாரக் கருவிகள் உட்பட பம்பிகள், எரிவாயு மற்றும் சமையலறை உபகரணங்கள், உருக்கியொட்டும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் |
| 11 | காலணிகள் - கன்வஸ் மற்றும் தோற் சப்பாத்துகள், பூட்ஸ், பாதுகாப்பு காலணிகள் போன்றன |
| 12 | ஆணிகள் மற்றும் சுரைகள், பித்தளை உபகரணங்கள், உலோகக் குழாய்கள் மற்றும் குழாய் பொருத்தும் பகுதிகள், உலோகத் தகடு, உலோக பொதுவான பல்வேறு வடிவங்கள் மற்றும் கம்பி வலை வகைகள், தும்புத்தடி, ஈர்க்கிள், தும்புக் கயிறு மற்றும் ஏனைய தும்பு உற்பத்திகள் (கம்பித் தூரிகை மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள் பூசும் தூரிகை வகைகள்) கண்ணாடி, நாரிழை பொருட்கள் உட்பட பொதுவான கனரகப் பொருட்கள் (GRP பொருட்கள்) மற்றும் உற்பத்திகள், ஒட்டுப் பலகைகள், MDF மற்றும் வேல்வுகள். |
| 13 | தகரங்களைச் சுத்தம் செய்யும் கிறிட் பிளாஸ்டிங் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வார்ப்பு மண் |
| 14 | உயர் அழுத்த ஹோஸ் குழாய்கள் (ஹைட்ரோலிக், அதியமுத்த வாயு, தீயணைப்பு போன்றவைகளுக்கானது) |
| 15 | உராய்வுநீக்கி எண்ணெய்கள் |
| 16 | மெனிலா, புரோலிபொப்லின் மற்றும் நைலோன் கயிறுகள் |
| 17 | அலுவலக காகிதாதிகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள் |
| 18 | நிறப்பூச்சுகள் -இனாமல் மற்றும் இமல்ஷன், பொலிஷ், முத்திரையிடும் கொம்பவுன்டுகள், விசிறியடிக்கும் நிறப்பூச்சு வகைகள், பிளர் பேஸ்ட் மற்றும் விசிறியடிக்கும் நிறப்பூச்சுகளுக்கான தினர், மெரைன் தரம் மற்றும் அவ்வாறான நிறப்பூச்சுக்கான தினர் வகைகள் |
| 19 | போர்சலின் பொருட்கள், துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் |
| 20 | வீதிகளுக்கான தார் வகைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட தார் கலவை, (உலோகம், அஸ்போல்ட் மற்றும் அஸ்போல்ட் கொங்கிறீட்) ILB மற்றும் ஏனைய சீமெந்து உற்பத்திகள், ABC, பிட்டுமன் உற்பத்திகள் |
| 21 | இறப்பர் மற்றும் வெல்கனைசிங் உற்பத்திகள், டயர்கள் மற்றும் டியூப்கள் |
| 22 | பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள், சுழியோடும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 23 | வாகன உதிரிப்பாகங்கள், ரேடியேட்டர் மற்றும் ரேடியேட்டர் கோர்கள் |
| 24 | கிரேன், போக் லிப்ட், டொப் லிப்ட் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்கள், கடல்சார் சாதனங்களுக்கான உதிரிப்பாகங்கள், பிரைம் மூவர்கள் மற்றும் யாட் டிராக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 25 | உருக்குத் தளபாடங்கள், பிளாஸ்டிக், மரத் தளபாடங்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள் |
| 26 | அரியப்பட்ட பலகைகள் |
| 27 | வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிரூட்டிகள், வளிச்சீராக்கி குளிரூட்டி கட்டுப்பாட்டு துணைப்பாகங்கள், குளிரூட்டி வாயுக்கள், துணைப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் |
| 28 | வயர் ரோப் வகைகள் |
| 29 | மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் |
| 30 | புகைப்படங்கள் தயாரித்தல், அச்சிடல் மற்றும் அது சார்ந்த சகல சேவைகளும் உள்ளடங்கலாக |
| 31 | நாய் உணவு |
| 32 | புகைப்படப் பிரதி மற்றும் ஸ்கேனர் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களை வாடகைக்கு வழங்கும் சேவைகள் |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநராக பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 01 தொடக்கம் 32 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.30 மணி வரை 2024-10-30ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருளுக்காகவும் 1000.00 ரூபா மற்றும் வெட் வரியைச் செலுத்தியதன் பின் இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் பிரதான வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. குழுவினால் பரீட்சித்துப் பார்த்து வழங்கல் இயலுமை தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டு அந்தக் குழுவினால் சிபாரிசு செய்யப்படும் நிறுவனங்களை மட்டும் பதிவு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
04. வழங்கலின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடம் இருந்து விலைகளைக் கோரவும் கொள்வனவு செய்வதற்கான உரிமையை துறைமுக அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
05. முறையாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள், துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு ஒவ்வாத தன்மையிலுள்ள பொருட்கள் மற்றும் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.
06. அனைத்து விண்ணப்பங்களும் ''2025ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்), வழங்கல் பிரிவு, இலங்கை துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு 2024-10-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பிரதான வழங்கல் முகாமையாளர் அலுவலகத்தில் இந்த விண்ணப்பங்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
07. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2482259, 2320250, 2483553, 2482499, 2328342 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு, இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண கல்வித் திணைக்களம்

## *ஊவா மாகாண சபை*

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவுடன் கூடிய தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024.10.21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | வேலையின் பெயர் | சிவில் வேலைகளின் பெறுமதி ரூ. மில்லியன் | தேவையான குறைந்த பட்ச ICTAD பதிவு மற்றும் துறை | நிர்மாணக் காலப் பகுதி நாட்கள் | கேள்விப் பிணைத் தொகை ரூபா | கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| ENG 7/2024 03 | ப/பண்டாரவளை புனித ஜோசப் வித்தியாலயத்தின் அதி அபாயகரமான கட்டிடங்கள் மற்றும் இடங்களை நவீனமயப்படுத்துதல் | 8.18 | C 7/C 6 | 120 | 41,000.00 | 5,000.00 |
| ENG 7/2024/ 332 | ப/மகியங்கனை தேசிய பாடசாலையில் 70'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை புனரமைத்தல் | 6.12 | C 7/C 6 | 120 | 30,500.00 | 5,000.00 |
| ENG/7/2024 298 | ப/கந்தகெட்டிய டீ.எஸ். சேனாநாயக்க வித்தியாலயத்தில் 70'x20' அழகியற்கலைக் கட்டிடம் மற்றும் பிரதான மண்டபத்தின் திருத்தவேலைகள் மற்றும் வடிகான் முறைமையை நிர்மாணித்தல் | 7.00 | C 7/C 6 | 90 | 35,000.00 | 5,000.00 |
| ENG/7/2018/ 105 | ப/பண்டாரவளை மத்திய மகா வித்தியாலத்தின் கேட்போர் கூடத்தை நவீனமயப்படுத்துதல் | 5.51 | C 7/C 6 | 90 | 28,000.00 | 5,000.00 |

கேள்வி கோரலானது தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் முறையின் ஊடாக கோரப்படும் என்பதுடன் நிதி அமைச்சின் 04/2016(iii) இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களுக்கான மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தரப் பதிவு முன்னுரிமை என்பன கேள்விகளை மதிப்பிடுகையில் கவனத்திற் கொள்ளப்படும்.

02. மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சீடா (CIDA) பதிவுடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் கேள்விகளைப் பெற்றுக்கொள்ளத் தகைமை பெறுவர்.
03. இதற்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் உடன்படிக்கைச் சட்டத்தின் கீழ் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பதிவுச் சான்றிதழ் அல்லது உறுதி செய்யக்கூடிய ஆவணத்தை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம்.
04. கேள்வி மாதிரிப் படிவங்களை 2024-09-27ஆம் திகதி முதல் 2024-10-18ஆம் திகதி வரை வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணக் கட்டணத்தை ஊவா மாகாண கல்விப் பணிப்பாளரின் பெயரில் திணைக்கள சிறாப்பருக்குச் செலுத்திப் பெறுகை மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பிணையை ரொக்கப் பணமாகச் செலுத்தாவிட்டால் அத்தொகையின் இரு மடங்குப் பெறுமதிக்கு வங்கிப் பிணை முறியொன்றை இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக் கொண்ட 2025-02-21ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வங்கி முறியொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் உரிய பெறுகைக் குழுவுக்கு 2024-10-21ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவத்தின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறாக இரு உறையினுள் இட்டு அவ்விரண்டையும் ஒரு உறையினுள் இட்டு அந்த மூன்று கடித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரையிட்டு தலைவர், பெறுகைக் குழு, ஊவா மாகாண கல்வித் திணைக்களம், வெலகெதர வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். இயைபுடைய மேலதிக விபரங்களை ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைக் கட்டிடங்கள் பிரிவின் 055-2229635 எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தின் 055-2229629 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
06. நகல் பிரதி மூலப் பிரதியின் எல்லா பக்கங்களும் சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியாயிருத்தல் வேண்டும்.
07. கேள்விகள் 2025-01-21ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
08. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-09ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெறும்.
09. 2024-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பதுளை, ஊவா மாகாணக் கல்வித் திணைக்கள அலுவலகத்தில் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
10. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகளில் தகுதியான கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**ஏ.எம்.ஆர். அமரதாச,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு.**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்,**
**வெலகெதர வீதி,**
**பதுளை.**
**2024-09-25.**

OBSERVER ADZ
தினகரன் வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper Rs. 800/- (Except Thinakaran Varamanjari)
Two Newspapers Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari)
Three Newspapers Rs. 1,330/-
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# கேள்விக்கான அழைப்பு

**காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரம் மற்றும் மீன்பிடி விடயங்கள் அமைச்சு**

## சபரகமுவ மாகாண சபை

சபரகமுவ மாகாண சபையின் காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரம் மற்றும் மீன்பிடி விடயங்கள் அமைச்சின் பெறுகைக்குழுவின் தலைவரால் கணனி மற்றும் துணைப்பாகங்கள் வழங்குவதற்காக தகைமை மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டிகேள்வி கோரல் (NCB) இன் கீழ் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | பொருட்கள் வகை | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை முறி கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | Desktop Computer | 58 | 7,500.00 | 150,000.00 |
| 02 | Photocopy | 05 | | 13,000.00 |
| 03 | UPS 650V | 44 | | 3,500.00 |
| 04 | Computer Monitor | 11 | | 3,000.00 |
| 05 | Printer | 28 | | 13,500.00 |
| 06 | Laptop Computer | 33 | | 75,000.00 |
| 07 | Multimedia Projector | 3 | | 6,000.00 |
| 08 | Scanner | 2 | | 1,000.00 |

02. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்றன கேள்விதாரர்களுக்கு சபரகமுவ மாகாண விவசாய அமைச்சிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் (தொ. பே. இல.: 045-2224425) 2024.09.26 முதல் 2024.10.16 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து கீழ்க்காணும் முகவரிக்கு வேண்டுதல் விடுத்து மேற்குறிப்பிட்டவாறு கட்டணம் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம்.

03. இப்பெறுகை பற்றிய விவரமான தகவல்களை சபரகமுவ மாகாண சபையின் www.sg.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து அங்கு Download மெனுவிற்குச் சென்று அங்கு Tender Notices தேர்ந்தெடுத்து அங்கு Ministry of land, Province Irrigation, Agriculture இற்கு பிரவேசித்து அல்லது, https://moa.sg.gov.lk/tender-notices/ என்ற லிங்க் இற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக்குழு**
**காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், விலங்கு உற்பத்தி**
**மற்றும் விலங்கு, சுகாதாரம் மற்றும் மீன்பிடி விவகார அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை**
**புதிய நகரம் - இரத்தினபுரி,**
**2024.09.26**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை – மாத்தளை

### வைத்தியசாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக விலைமனு கோரல்

மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் விரிவாக்கல் கட்டம் 2 இன் கீழ் நிறைவேற்றப்படவுள்ள ஒப்பந்தங்களுக்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துகொண்டுள்ள தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| ஒப்பந்த இல. | ஒப்பந்த வேலை | ஒப்பந்தத்தின் பெறுமதி (வெட் வரி மற்றும் ஏனைய வரிகள் இன்றி) | CIDA வகைப் படுத்தலின் பிரகாரம் தரம் | ஒப்பந்தக் காலம் | விலைக்கோரல் பிணை முறி | | விலை மனுவின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | செல்லுபடிக் காலம் | |
| MT/ 2024/05 OPD-PCU (stage-ii) | Extension of Existing OPD Building (stage-ii) | 48.86 மில்லியன் ரூபா | C - 4 & C - 5 | 75 நாட்கள் | ரூபா 500,000.00 | 119 நாட்கள் | 91 நாட்கள் |

02. விலைமனு ஆவணங்களை 2024-09-26ஆம் திகதி முதல் 2024-10-09ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமையை நிரூபிப்பதற்கான சாட்சி மற்றும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா விலைக்கோரல் ஆவணக் கட்டணத்தை (ஒரு வேலைக்கு) மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிற்குப் பணம் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளப்படும் 172 பொது மாதிரிப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் வைத்தியசாலைக்கு வருகை தந்து குறித்த இடத்தை பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் குறித்த ஒப்பந்தம் தொடர்பில் ஏதேனும் சிக்கல்களை தெளிவுபடுத்திக்கொள்வதற்காக 2024-10-02ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். விலைமனுதாரர்களினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனை மற்றும் திருத்தங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். ஒப்பந்தக்காரர்கள் குறித்த இரண்டு வேலைக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதானால் வெவ்வேறான உறைகளில் இட்டு விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "Extension of Existing OPD Building (stage-ii)" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் அதாவது 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வைத்தியசாலையின் அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை அலுவலக நேரத்தினுள் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தளை.**
**2024-09-24.**

# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **பொருட்கள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM [E]/QPPC/24/153** கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக மடிக்கணினிகளின் வழங்கல் மற்றும் விநியோகம் - 6 எண்கள். | 16-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 42,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM [E]/QPPC/24/154** மேசைக் கணினிகளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் பரீட்சித்தல் - 26 எண்கள் | 16-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 185,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM [E]/QPPC/24/159** பணம் எண்ணும் இயந்திரங்களின் வழங்கல், விநியோகம், மற்றும் நிறுவுதல் - 3 எண்களை | 16-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 30,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | **DGM [E]/QPPC/24/160** கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக கைவிரல் அடையாள இயந்திரங்களின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் பரீட்சித்தல் - 2 எண்கள். | 16-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 5,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | **DGM [E]/QPPC/24/161** கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக பிரிண்டர்களின் வழங்கல் மற்றும் விநியோகம் - 11 எண்கள். | 16-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 70,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | **DGM [E]/QPPC/24/163** கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக மல்டிமீடியா புரொஜெக்டரின் வழங்கல் மற்றும் விநியோகம் - 3 எண்கள் | 16-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 15,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | **DGM [E]/QPPC/24/165** கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக LED தொலைக்காட்சி வழங்கல் மற்றும் விநியோகம் - 3 எண்கள் | 16-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 11,500.00 | NCB |
| வி .பி 01 (வ.மா) | **DGM/NP/CE(Com)/T/2024/118** வட மாகாணத்தில் பயன்படுத்திய பொருட்களை அகற்றுவதற்கான ஏலம். | 22-10-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (வ.மா) அலுவலகம், இலங்கை மின்சார சபை, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 021 222 0496 | 1,000.00 | NCB |
| **சேவைகள்** | | | | | |
| **பிறப்பாக்கல் (தம்பபவனீ காற்றாலை மின்னுற்பத்தி நிலையம்)** | **MC/TWPS/PROC/2024/78** **மன்னார் "தம்பபவனீ" காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின்** தோட்டவெளியில் உள்ள விடுதி கட்டிட வளாகம் மற்றும் நடுக்குடாவில் உள்ள நிர்வாக கட்டிடம் மற்றும் துணை மின்நிலையத்திற்கான துப்புரவு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கான கேள்விமனு கோரல். | 10.10.2024 14.00 மணிக்கு. மற்றும் கேள்வி மனுக் கோரலுக்கு முந்தைய கூட்டம், தள வருகை 03.10.2024 அன்று காலை 14.00 மணிக்கு நிர்வாக கட்டிடத்தில் இடம்பெறும் | தலைமை பொறியியலாளர் அலுவலகம், தம்பபவனி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம், இலங்கை மின்சார சபை, நடுக்குடா, மன்னார், 41000. தொ. இல.: 023 203 1020 மற்றும் | ரூ. 1,000/= அனைத்து கட்டணங்களையும் மக்கள் வங்கியின் (தலைமையகக் கிளை) மகாவலி வளாக 204-2002-30085-134 என்ற சேமிப்பு கணக்கிற்கு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் பணம் செலுத்தப்பட்டு வங்கிச் சீட்டை சமர்ப்பிக்க வேண்டும். | தேசிய போட்டி கேள்வி மனு (NCB) |

மேற்படி கொள்முதல் குழுவின் தலைவர், இலங்கை மின்சார சபையின் சார்பாக, சர்வதேச/தேசிய போட்டி கேள்வி மனுவின் அடிப்படையில் மேற்கூறப்பட்டுள்ள பொருட்கள், கட்டுமானங்கள் மற்றும் சேவைகளுக்கு சாத்தியமான வழங்குனர்களிடமிருந்து மூடப்பட்ட கேள்வி மனுக்களை இப்போது அழைக்கிறார். மின்சார சபையிடமிருந்து வாங்கப்பட்ட கேள்வி மனு ஆவணங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடைசி வரிசையில் வழங்கப்பட்ட இணைப்பிலிருந்து "தகவல் நகல்" (ஏலத்திற்கு அல்ல) இனை ('Information copy' not for bidding) பதிவிறக்கம் செய்யலாம்.

கேள்வி மனு ஆவணங்கள் வருங்கால மனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். தேவையான சந்தர்ப்பங்களில் அவர்கள் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 3 இன் அடிப்படையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

கேள்வி மனு ஆவணங்களின் ஒவ்வொரு தொகுப்பிற்கும் மேலே உள்ள அட்டவணையின் 6 ஆம் வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்தி, கேள்வி மனு முடிவடையும் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வரை எந்த வேலைநாட்களிலும் 0900மணி முதல் 1500மணி வரை இ.மி.ச. யின் பிரதிப் பொது முகாமையாளர்/தலைமைப் பொறியியலாளரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன்மூலம், கேள்வி மனு ஆவணங்களை எந்தவொரு வருங்கால மனுதாரரோ அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவரோ பெற்றுக்கொள்ளலாம். பொது முகாமையாளர், இ.மி.ச. யின் பெயரில் பணம் அல்லது வங்கி வரைவோலையாக (Bank Draft) பணம் செலுத்தப்படவேண்டும்.

வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பித்தால் கேள்வி மனு ஆவணங்களின் தகவல் நகல்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி மனு ஆவணங்களை வருங்கால மனுதாரர் அல்லது அவர்களின் முகவர்கள் சம்பந்தப்பட்ட பி.பொ.மு/த.பொ. (DGM/CE) அலுவலகத்தில் இலவசமாக ஆய்வு செய்யலாம்.

கேள்வி மனு கோரல் முடிவடைந்த பின்னர் ஏலதாரர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், வரிசை 9 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் ஏலம் திறக்கப்படும். தாமதமான கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும்.

ஏல ஆவணங்களை வழங்கிய இ.மி.ச. யின் அந்தந்த பி.பொ.மு/த.பொ. இடமிருந்து, ஏல இறுதித் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனைத்து விளக்கங்களும் கோரப்படலாம்.

* ICB – International Competitive Bidding (சர்வதேச போட்டி கேள்வி மனுக்கோரல்)
* NCB – National Competitive Bidding (தேசிய போட்டி கேள்வி

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# நியூசிலாந்துக்கு எதிராக 15 ஆண்டுகளில் முதல் தொடர் வெற்றிக்காக இலங்கை இன்று களத்தில்


## இலங்கை பதினொருவர் அணியில் இரு மாற்றங்கள்

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று (26) காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதே காலி மைதானத்தில் இரு அணிகளும் மோதிய முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றியீட்டிய நிலையில் 15 ஆண்டுகளின் பின்னர் நியூசிலாந்துக்கு எதிராக டெஸ்ட் தொடர் ஒன்றை முதல் முறை வெல்லும் எதிர்பார்ப்புடனேயே இலங்கை அணி களமிறங்கவுள்ளது.

இலங்கை அணி கடைசியாக 2009 ஆண்டு நடந்த நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2–1 என வென்றிருந்தது. மறுபுறம் இலங்கை மண்ணில் முதல் முறை டெஸ்ட் தொடர் ஒன்றை வெல்லும் வாய்ப்பை இழந்திருக்கும் நியூசிலாந்து அணி இரண்டாவது டெஸ்டை வென்று தொடரை சமன் செய்ய முயலும்.

காலி மைதானம் சுழற்பந்துக்கு அதிக சாதகமான நிலை இருப்பதால் இரு அணிகளும் அது தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வாய்ப்பு உள்ளது. முதல் டெஸ்டில் இலங்கை அணியின் முன்னணி டெஸ்ட் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய மொத்தம் ஒன்பது விக்கெட்டுகளை வீழ்த்தியது அணியின் வெற்றிக்கு உதவியது.



குறிப்பாக காலியில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஜயசூரிய அங்கு ஆடிய ஏழு டெஸ்ட் போட்டிகளில் 62 விக்கெட்டுகளை வீழ்த்தி இருப்பதோடு ஏழு முறை 5 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார்.

இந்நிலையில டெஸ்ட் குழாத்தில் இருந்து உபாதை காரணமாக விலகிய வேகப்பந்து வீச்சாளர் விஷ்வ பெர்னாண்டோவுக்கு பதில் விசேட சுழற்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் அழைக்கப்பட்டுள்ளார். அவர் இன்றைய தினத்தில் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடவுள்ளார். முதல் டெஸ்ட்டில் ஆடிய சுழற்பந்து வீச்சாளர் ரமேஷ் மெண்டிஸுக்கு பதிலே அவர் இடம்பெற்றுள்ளார்.

அதேபோன்று இன்று ஆரம்பமாகும் போட்டியில் இலங்கை அணியில் இரண்டாவது மாற்றமாக வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார நீக்கப்பட்டு மிலான் ரத்நாயக்க அணியில் இடம்பெற்றுள்ளார்.

நியூசிலாந்து அணியின் இடது கை சுழல் வீரர் அஜாஸ் பட்டேலுடன் வேகப்பந்து வீரர் வில்லியம் ஒரூக்கும் இலங்கை வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தார்.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையில் கமிந்து மெண்டிஸ் முதல் டெஸ்டில் மீண்டும் ஒருமுறை சிறப்பாக செயற்பட்டு தனது நான்காவது டெஸ்ட் சதத்தை பெற்ற நிலையில் இரண்டாவது டெஸ்டிலும் அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இதில் ஆரம்ப வரிசை மேலும் ஓட்டங்களை சேகரித்தால் எதிரணிக்கு நெருக்கடி கொடுக்க முடியுமாக இருக்கும். முதல் டெஸ்டில் பத்தும் நிசங்க இரு இன்னிங்ஸ்களிலும் ஓட்டங்கள் பெற தவறியபோதும் மறுமுனை ஆரம்ப வீரர் திமுத் கருணாரத்ன மற்றும் முதல் வரிசை வீரர் தினேஷ் சந்திமால் ஆகியோர் இரண்டாவது இன்னிங்ஸில் பெற்ற அரைச்சதங்கள் எதிரணிக்கு சவாலான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க உதவியது.

மறுபுறம் கேன் வில்லியம்சன், டெவோன் கொன்வோய், ரச்சின் ரவிந்திரா என நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசை வலுவாக இருந்தபோதும் ஆரம்ப வீரர் டொம் லதம் முக்கியமானவர். அவர் முதல் டெஸ்டில் 70 மற்றும் 28 ஓட்டங்களைப் பெற்றதோடு சுழற்பந்து வீச்சாளர்களை சிறந்த முறையில் எதிர்கொண்டு வருகிறார். இலங்கைக்கு எதிராக 1137 ஓட்டங்களை பெற்றிருக்கும் அவரின் ஓட்ட சராசரி 67 ஆகும்.

இலங்கை அணி இந்த டெஸ்ட் தொரை கைப்பற்றுவதற்கு இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் போட்டியை சமன் செய்தாலேயே போதுமாகும்.

இலங்கை கால்பந்து

## முத்தைரியின் பதவிக் காலம் மற்றொரு தொடருக்கு நீடிப்பு



இலங்கை கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளர் அப்துல்லா அல் முத்தைரியின் பதவிக் காலம் அடுத்த சர்வதேச போட்டித் தொடர் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கம்போடியாவுக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டிகளில் இலங்கை பெற்ற வெற்றியை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இலங்கை அணி பிஃபா உலகத் தரவரிசையிலும் முன்னேற்றம் கண்டது.

குவைட்டைச் சேர்ந்த 42 வயது அல் முத்தைரி கடந்த ஓகஸ்டில் இலங்கை கால்பந்து அணியின் இடைக்காலப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் இலங்கை அணி எதிர்வரும் ஒக்டோபர் 10 மற்றும் 13 ஆம் திகதிகளில் மியன்மார் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டிக்கு அவர் இலங்கை கால்பந்து அணியின் பயிற்சியாளராக செயற்படவுள்ளார்.

அல் முத்தைரி இதற்கு முன்னர் நேபாள தேசிய அணிக்கு பயிற்சியாளராக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



கிண்ணியா எளிலரங்கு விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் இணைந்து நடத்திய கால்பந்து தொடரில் சம்பியன் கிண்ணத்தை வென்ற ரேஞ்ஜேர்ஸ் அணியை காணலாம். இதன்போது இறுதிப் போட்டியில் புளூ பேர்ட் கால்பந்தாட்ட அணியை வீழ்த்தியே ரேஞ்ஜேர்ஸ் கிண்ணத்தை வென்றது.

(படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)



## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலில் டெல் அவிவ் மீது ஹிஸ்புல்லா முதல்முறை பலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல்

## லெபனானில் தொடரும் இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்களில் மேலும் பலர் பலி

லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து சரமாரித் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் இஸ்ரேலின் டெல் அவிவ் நகர் மீது ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று முதல் முறையாக பலிஸ்டிக் ஏவுகணையை வீசியுள்ளது. இந்தத் தாக்குதல் முன்னர் நிகழாத ஒன்று என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

ஏவுகணை வீச்சை அடுத்து டெல் அவிவில் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதோடு, நகருக்கு மேலால் தரையில் இருந்து தரையை தாக்கும் ஏவுகணை ஒன்று இடைமறிக்கப்பட்டது என்று இஸ்ரேல் இராணுவம் கூறியது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் கிட்டத்தட்ட கடந்த ஓர் ஆண்டாக இஸ்ரேலுடன் பரஸ்பர தாக்குதல்களை நடத்தி வரும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு பலிஸ்டிக் ஏவுகணை தாக்குதலை நடத்தியதாக குறிப்பிட்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

டெல் அவிவில் உள்ள இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட் தலைமையகத்தை இலக்கு வைத்து இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹிஸ்புல்லா கூறியது. அண்மையில் ஹிஸ்புல்லா போராளிகள் கொல்லப்பட்ட பேஜர் மற்றும் வோக்கி டோக்கி சாதனங்கள் வெடித்ததன் பின்னணியில் மொசாட் இருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது.

அதேபோன்று ஹிஸ்புல்லாவின் ஏவுகணை ஒன்று டெல் அவிவ் நகரை அடைந்தது இதுவே முதல் முறை என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் கோட்டையாக உள்ள தெற்கு லெபனானின் நகரங்கள், கிராமங்கள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் மூன்றாவது நாளாகவும் நேற்று கடும் தாக்குதல்களை நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை தற்போது 560ஐ தாண்டியுள்ளது.

இந்நிலையில் புதிய தாக்குதல்கள் காரணமாக மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பதாக லெபனானின் தேசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. மோதல் உக்கிரம் அடைந்து வரும் சூழலில் பாதுகாப்புத் தேடி லெபனானில் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றன.

ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று நியூயோர்க்கில் அவசரமாகக் கூடி இந்தப் பதற்றம் குறித்து பேசியது. நிலைமை மோசமடைந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் எச்சரித்தார்.

லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை கண்டித்திருக்கும் எகிப்து, ஈராக் மற்றும் ஜோர்தான் வெளியுறவு அமைச்சர்கள், 'இது பிராந்தியத்தில் முழு அளவில் போர் ஒன்றுக்கு இட்டுச் செல்லும்' என்று எச்சரித்துள்ளனர்.



நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்திற்கு இடையே சந்தித்த இந்த மூன்று அமைச்சர்களும் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'போரை நிறுத்துவதில் சர்வதேச சமூகம் மற்றும் பாதுகாப்பு கவுன்சில் தங்கள் பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்று அமைச்சர்கள் அழைப்பு விடுக்கின்றனர். இந்த சீரழிவுக்கு இஸ்ரேல் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதோடு இது பிராந்தியத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்' என்று அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சிரியாவில் இருந்து இஸ்ரேலுக்குள் நுழைந்த ஆளில்லா விமானம் ஒன்றை போர் விமானங்கள் இடைமறித்ததாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது. கலிலி கடலுக்கு மேலால் அது இடைமறிக்கப்பட்டதாகவும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அது கூறியது.

ஆளில்லா விமானம் ஒன்றின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று பகுதியில் உள்ள இலக்கு ஒன்றை தாக்கியதாக ஈராக்கில் உள்ள இஸ்லாமிய எதிர்ப்பு போராட்டக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

மறுபுறம் தெற்கு லெபனானில் இருந்து வெளியேறிய மக்கள் பெய்ரூட்டில் பாடசாலைகள் மற்றும் ஏனைய கட்டடங்களில் அடைக்கலம் பெற்றுள்ளனர். லெபனானில் அரை மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அப்துல்லா பௌஹபிப் குறிப்பிட்டுள்ளார்.

பெய்ரூட் நகர் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது. பெய்ரூட்டின் தெற்கு புறநகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டு மேலும் 15 பேர் காயமடைந்தாக லெபனான் சிவில் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் தமது அமைப்பின் இராணுவப் பிரிவின் மூத்த உறுப்பினரான இப்ராஹிம் முஹமது குபைசி கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லா தெரிவித்தது.

பெய்ரூட்டின் வடக்காக கெசர்வான் மலைப் பிராந்தியத்தில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டு மேலும் ஒன்பது போர் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அயின் கானா நகரில் இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் மேலும் மூவர் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அதேபோன்று தெற்கு லெபனானின் கன்டாரா சிறு நகர் மீது இடம்பெற்ற வான் தாக்குதலில் அல் மனார் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஒளிப்பதிவாளரான கமெல் கராக்கி கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் கிட்டத்தட்ட கடந்த ஓர் ஆண்டாக பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸுடன் சண்டையிட்டு வரும் இஸ்ரேல், தற்போது ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தி வரும் ஹிஸ்புல்லா அமைப்பு மீது அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

ஹமாஸை விடவும் வலுவானதும், முறையான இராணுவ கட்டமைப்பைக் கொண்டதும், அனுபவம் பெற்றதுமாக ஹிஸ்புல்லாவுடனான போரில் பல தேர்வுகளுக்குத் தயாராக இருப்பதாக இஸ்ரேலிய இராணுவத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹிஸ்புல்லா தாக்குதல்கள் காரணமாக வடக்கு எல்லையில் இருந்து வெளியேறிய இஸ்ரேலியர்கள் பாதுகாப்புடன் அங்கு திரும்புவதை இலக்கு வைத்தே இஸ்ரேல் லெபனானில் தாக்குதல்களை தீPவிரப்படுத்தி உள்ளது.

லெபனானில் தரைவழி தாக்குதல் ஒன்றுக்காக இஸ்ரேலிய துருப்புகள் கடந்த பல மாதங்களாக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காசாவில் 24 மணி நேரத்தில் மேலும் 53 பலஸ்தீனர்கள் பலி



காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலியப் படை வீடுகள் மற்றும் தற்காலிக முகாம்கள் மீது நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 53 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவின் பெய்த் லஹியாவில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதோடு நுஸைரத் அகதி முகாமில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் கூடாரம் மீது இடம்பெற்ற வான் தாக்குதலில் அங்கு தங்கியிருந்த இருவர் பலியாகியுள்ளனர்.

மத்திய காசாவின் நுஸைரத்தில் கொல்லப்பட்டவர்கள் அல் இஜ்லா குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். கடந்த ஓகஸ்டில் இதே குடும்பத்தைச் சேர்ந்த பதினொருவர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ரபாவின் வடகிழக்கே ஹை அல் நாசிலர் பகுதியில் வீடு ஒன்றின் மீது இடம்பெற்ற இஸ்ரேலின் குண்டு வீச்சில் பெண் ஒருவரும் அவரது ஐந்து குழந்தைகளும் கொல்லப்பட்டிருப்பதாக அல் ஜஸீரா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜுந்தி குடும்ப வீட்டின் மீது இடம்பெற்ற தாக்குதலில் காசா நகரின் சிஞ்சு பகுதியில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்தது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து வெடித்த காசா போரில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,495 ஆக உயர்ந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தவிர 96,006 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேநேரம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலின் சுற்றிவளைப்புகள் தொடர்ந்து இடம்பெற்று வருதோடு ஹெப்ரோன் நகரில் நேற்று ஆறு பேர் கைது செய்யப்பட்டதோடு ஹெப்ரோனின் மேற்காக இத்னாவில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 26ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.